பக்கங்கள்: 12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 27 வெள்ளிக்கிழமை 09.04.2021 கதிர் 155

**இனிது ரகசியம் அல்ல!**

மாகாண சபைத் தேர்தல் நடக்குமா? நடக்காதோ? - இதுதான் இலங்கையின் அரசியலில் இன்று பிரதான பேசுபொருள்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து அதிகாரத் தரப்பு ஆர்வம் காட்டுவது போல வெளியில் தோன்றினாலும், அப்படி பக்கம்02

### ரஞ்சன் ராமநாயக்கவின் எம்.பி. பதவி விவகாரத்தால்


# கொதித்தது நாடாளுமன்றம்; சமல் - சரத் கடும் வாக்குவாதம்

## ஆளும் — எதிரணியினர் தகாத வார்த்தைப் பிரயோகம்



ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிபோனமை குறித்து சபையில் நேற்று ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் பொன்சேகாவுக்கும் இடையிலான வார்த்தை மோதலாக மாறியது. 2





## உருமாறிய வைரஸ் கொழும்பில் பரவல்

கொழும்பு, ஏப்ரல் 09

டென்மார்க்கில் பரவிவரும் ய.1.428 ரக கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளான 3 கொவிட் தொற்றாளர்கள் கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறை பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

## கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு மைத்திரி தலைமையில் அவசர சந்திப்பு

### விமல், கம்மன்பில, வாசு, திஸ்ஸ உள்ளிட்ட 'மொட்டு'வின் முக்கிய புள்ளிகள் பங்கேற்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றிரவு விசேட சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் 2

## யாழ்.காவல் படை சீருடை குறித்து தீவிர விசாரணை



யாழ்ப்பாணம் மாநகர சபையால் அமைக்கப்பட்டுள்ள மாநகர காவல் படை மற்றும் அதன் சீருடை தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் 2

## யாழில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 7 பேருக்கும், கிளிநொச்சியில் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

## கொரோனாவால் யாழில் 8ஆவது உயிரிழப்பு பதிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண்ணொருவர் கொரோனா வைரஸ் தொற்று நோயால் சாவடைந்துள்ளார்.

சிறுநீரக செயலிழப்பு காரணமாக சிகிச்சை பெற்று வந்த கோண்டாவிலைச் சேர்ந்த 79 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் இதுவரை 8 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

## வடமராட்சி மீனவர் மூவருடன் சென்ற படகு திரும்பவில்லை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.09

வடமராட்சி கற்கோவளம் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் 7ஆம் திகதி மூன்று மீனவர்களுடன் சென்ற மீனவர் படகு இன்று அதிகாலை வரையில் கரை திரும்பவில்லை என மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதோடு பருத்தித்துறை பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

காணாமல்போன மூன்று மீனவர்களையும் தேடி நேற்று மாலை 3 படகுகளில் உள்ளூர் மீனவர்கள் கடலிற்குச் சென்ற போதும் பயனேதுமின்றி நேற்று இரவு அவர்கள் கரை திரும்பினர்.

இதனையடுத்து 2

## 98 கடவுச்சீட்டுகளுடன் 3 சந்தேகநபர்கள் கைது



கொழும்பு, ஏப்ரல் 09

98 கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த மூன்று சந்தேக நபர்கள் பண்டாரகம, பொல்கொலவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடவுச்சீட்டுக்கு உரிமையானவர்களை சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதற்கு இந்த நபர்கள் முயன்றுஉள்ளனர் எனப்பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

### 2021இல் மீண்டுமொரு தாக்குதலா?

## சாணக்கியனை சி.ஐ.டிக்கு அழைத்து விசாரியுங்கள்!



### சபையில் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை உடனடியாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சபையில் வலியுறுத்தினார்.

2021ஆம் ஆண்டில் அரச தரப்பினர் மீண்டுமொரு தாக்குதலை நடத்தத் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தேர்தலை உடனடியாக நடத்தும் எண்ணம் அதிகார பீடத்துக்கு இல்லை என்றே பல வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது. ஏற்கனவே மாகாணத் தேர்தல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அது தனது அமர்வுகளை நடத்த வேண்டும். ஏற்கனவே அதற்கு ஆறு மாத கால அவகாசம் இப்போதே வழங்கப்பட்டுள்ளது. ஆறு மாதங்களோ, அதன் பின்னரோ, முன்னரோ, அத்தெரிவுக்குழு மாகாணத் தேர்தல்களை எப்படி நடத்துவது என்ற தீர்மானத்துக்கு வரவேண்டும். அதன் பின்னர் தெரிவுக் குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் எல்லை நிர்ணய ஆணைக்குழு கூடி ஒவ்வொரு மாகாண சபைக்கும் மாவட்டம் தோறும் தொகுதிவாரியாகத் தெரிவு செய்யப்படக் கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அமைய தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயம் செய்ய வேண்டும். பின்னர் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் முடிவு - பரிந்துரை - அமைச்சரவையாலும் அரசாலும் ஏற்கப்பட்டு, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக வேண்டும்.

இவை எல்லாம் நடந்தேறி அதற்குப் பின்னர் மாகாண தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகளாவது பிடிக்கும் என்றே நாம் எண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

இப்படி எதிரணியும், தமிழர் தரப்பும் ஆசுவாசமாய் கருதிக் கொண்டு, தங்களுக்குள் பிளந்து கிடக்க, திடுதிப்பென - அதிரடியாக - மாகாண சபைத் தேர்தலை நடத்தி வெற்றிக் கனியைச் சுவைக்க ஆளும் தரப்புத் திட்டமிட்டிருப்பதான தகவல் விவரங்களுடன் இப்போது கசிந்திருக்கின்றது.

இந்த உத்தேச திட்டத்தின் பிதாமகர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தான். அவரின் திட்டப்படி பின்வரும் விடயங்கள் விரைந்து அரங்கேறும் என அவருக்கு நெருக்கமான - மிக நம்பிக்கையான - வட்டாரம் கொழும்பில் தகவல் வெளியிட்டது.

புதிதாக நியமனம் பெறும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விரைந்து கூடும். மாகாணத் தேர்தல்களில் தொகுதி வாரியாக 70 வீதமும், விகிதாசார முறையில் 30 வீதமும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறைமையைப் பரிந்துரைக்கும் ஒரு முடிவை அது எடுக்கும்.

அதன் பிரகாரம், நாடு முழுவதிலும் மாகாண சபைகளுக்கு எழுபது வீதப் பிரதிநிதிகள் தொகுதி வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருப்பர். அதாவது 9 மாகாண சபைகளிலும் மொத்தம் 300 பிரதிநிதிகளை அப்படித் தொகுதி வாரியாகத் தெரிவு செய்ய வேண்டி நேரும். ஆனால் அதற்காகப் புதிதாக தொகுதிகள் வரையறை செய்யப்பட்டு எல்லை நிர்ணயம் செய்யப்பட மாட்டாது.

அதற்கு மாற்று வழி ஒன்றை ஆளும் தரப்பு கண்டுபிடித்துள்ளது. தற்போது இலங்கை முழுவதும் 330 பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் இருபதாயிரத்துக்குக் குறைந்த வாக்காளர்களைக் கொண்ட பிரதேச செயலர் பிரிவுகளை அருகில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுடன் இணைத்து ஒரு தொகுதியாக்குவதன் மூலம் நாட்டில் சுமார் முந்நூறு மாகாண சபைத் தொகுதிகளை ஏற்படுத்த முடியும். அப்படி தொகுதிகளை வகுப்பதற்குக் காலவிரயமோ, பிற நடவடிக்கைகளோ அவசியமற்றவை. ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவையும் ஒரு தொகுதியாகக் கருதி தொகுதி வாரித் தேர்தலை நடத்த முடியும்.

அப்படித் தொகுதி வாரித் தேர்தலிலும், ஒரு தொகுதியில் ஒரு கட்சியின் சார்பில் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களை போட்டியிட அனுமதித்து, ஒரு தொகுதியில் வென்ற கட்சியில் கூடிய விருப்பு வாக்கைப் பெற்றவரை அத்தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக அறிவிக்கும் திட்டமும் பரிசீலிக்கப்படவிருக்கின்றது.

இதன் மூலம், கூட்டணியில் பெரிய கட்சிகளுடன் தொங்கிக்கொண்டு நிற்கும் சிறிய கட்சியின் வேட்பாளர்கள், பெரிய கட்சியின் வாக்குகளைப் பயன்படுத்தி, தாம் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படும் முறைமையை முழுமையாக முறியடிக்கலாம் என்று பஸில் ராஜபக்ஷ தரப்பின் நிபுணத்துவம் கருதுவதாகத் தெரிகின்றது.

வருட இறுதிக்குள் புதிய அரசமைப்பு வருகின்றதோ இல்லையோ, அதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்து விடும் என்று பஸில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமான வட்டாரம் அடித்துக் கூறுகின்றது.

அது மட்டுமல்ல, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவை அண்மையில் பஸில் ராஜபக்ஷ சந்தித்துப் பேசினார் என்றும் -

மாகாண சபை முறைமை மிக முக்கியமானது, அது தவிர்க்கவோ, நிராகரிக்கப்படவோ முடியாதது, அது நீடித்தேயாக வேண்டும் என்று அப்போது பஸில் அடித்துக் கூறினார் என்றும் - உறுதிப்படுத்தியது அந்த வட்டாரம்.

எது, எப்படியோ மாகாண சபைத் தேர்தல் விரைந்து நடந்தால் நல்லது தான். முதல்வராகும் கனவில் இருப்போரின் வயிற்றில் பால் வார்க்கும் செய்தியல்லவா இது...!

- மின்னல் -

## வடமராட்சி மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட நீரியல்வளத் திணைக்களம் ஊடாக கடற்படையினரின் கவனத்திற்கு விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## கொழும்பு அரசியலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர மற்றும் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலர் கலந்துகொண்டனர்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான அமைச்சர் விமல் வீரவன்ஸ, அமைச்சர் உதய கம்மன்பில, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண, ஏ.எல்.எம்.அதாவுல்லா, அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் முன்னாள் அமைச்சர் டியூ. குணசேகர ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஆளும் தரப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதால் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் நேற்றிரவு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 352 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே, 8 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 4 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலும் 3 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது - என்றார்.

## சாணக்கியனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டமிட்டுள்ளனர் என்று சாணக்கியன் எம்.பி. சபையில் கூறிய கருத்து தொடர்பிலேயே அவர் இந்த விசாரணையை கோரியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும் அவர்களின் கருத்தியலை ஆதரிப்பவர்களும் இன்று எமது அரசு மீண்டுமொரு தாக்குதலை நடத்தத் திட்டமிடுகின்றது எனக் கூறுகின்றனர்.

வேண்டுமென்றே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களைத் தடுக்காதிருந்த எதிர்க்கட்சியினர் மீண்டுமொரு காட்டிக் கொடுப்புக்குத் தயாராகின்றனரா?

சாணக்கியனின் கருத்து தொடர்பில் எமக்கு பாரிய சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, உடனடியாக அவரிடம் விசாரணைகளை நடத்தி அவரது கூற்று தொடர்பான உண்மை நிலையை அறிந்து நாடாளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் வெளிப்படுத்துவது அத்தியாவசியமாகும் - என்றார்.

# யாழ்ப்பாணத்தில் புதன் 129 பேருக்குக் கொரோனா

## 88 பேர் பாற்பண்ணையைச் சேர்ந்தவர்கள்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 09

யாழ்ப்பாணத்தில் மேலும் 129 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை புதனிரவு கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் 88 பேர் நல்லூர் சுகாதார மருத்துவஅதிகாரிபிரிவில்பாற்பண்ணை - பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆய்வுகூடத்தில் ஆயிரத்து 3 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 129 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்தில் பாரதிபுரம் என்ற பகுதியில் 88 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 3 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 26 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் தொற்றாளர்களில் 20 பேர் யாழ்ப்பாணம் மாநகர சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இதன்மூலம் கடந்த 14 நாள்களில் யாழ்ப்பாணம் மாநகரக் கடைத்தொகுதிகளைச் சேர்ந்த 87 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது - என்றார்.

# பனையால் வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 09

யாழ்., வடமராட்சியில் பனையால் வீழ்ந்து சீவல் தொழிலாளி ஒருவர் பரிதாபகர மாக சாவடைந்துள்ளார்.

கரவெட்டி மேற்கு, கௌடானைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் விவிராசா (வயது 53) என்பவரே

## கொதித்தது நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தகாத வார்த்தைப் பிரயோகங்களையும், எச்சரிக்கை தொனியிலான கருத்துக்களையும் ஆளும் - எதிர்க்கட்சியினர் முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் சபை அமர்வுகள் அரை மணிநேரம் சூடுபிடித்தன .

ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபை நடுவே குதித்து சபை அமர்வுகளைத் தடுத்தமையால் சபை 15 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய வேளையில், ரஞ்சன் ராமநாயக்க தொடர்பான அறிவிப்பொன்றை சபாநாயகர் விடுத்தார்.

இதன்போது, 'அரசமைப்பின் பிரகாரமும் மேல் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலுமே ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இந்த விடயத்துக்கும் அவரின் நாடாளுமன்ற விடுமுறை கோரலுக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது. அதேபோல் அரசமைப்பின்படி எடுக்கப்பட்ட இந்த முடிவு தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தைக் கேள்விக்கு உட்படுத்த முடியாது. எனவே, ரஞ்சன் ராமநாயக்க விடயத்தில் அடிப்படையற்ற கருத்துக்களை எதிர்க்கட்சித் தலைவர் முன்வைக்கக் கூடாது.'- என்று சபாநாயகர் அறிவித்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ -

ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை விடயத்தில் நாம் மேன்முறையீடு செய்யவுள்ளோம். உயர்நீதிமன்றத்தில் எவ்வாறான தீர்ப்பு வழங்கப்பட்டாலும் அதனை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளோம். ஆனால், அதுவரையில் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிக்கும் நடவடிக்கையை எடுக்க வேண்டாம். ரஞ்சன் ராமநாயக்கவின் விடயத்தில் ஏன் நீங்கள் இவ்வாறு அவசரப்படுகின்றீர்கள்? உண்மையில் ரஞ்சன் ராமநாயக்கவின் விடயத்தில் சூழ்ச்சி ஒன்று இடம்பெறுகின்றது - என்றார்

இதேவேளை, ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிரணி உறுப்பினர் சரத் பொன்சேகா எம்.பி. -

இந்தச் சபையில் கதைகளைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது கடந்த கால சம்பவங்கள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. கடந்த 2010 - 2015 அரசு தவறாகவும், கீழ்த்தரமாகவும் என்னை நடத்தியது - என்றார்.

இதன்போது அமைச்சர் சமல் ராஜபக்ஷ கூறுகையில் -

நீங்கள் நாடாளுமன்றத்திற்கு வருவதற்கான அனுமதியை நானே வழங்கினேன். உங்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை அவதானித்து காரணிகளை ஆராய்ந்தே நடவடிக்கை எடுத்தேன். தெரியாததைப் போல் கேட்கின்றீர்கள். உங்களைச் சபைக்கு அனுமதிக்கவில்லையா எனக் கூறுங்கள் - என்றார்.

இதன்போது எதிர்த்தரப்பில் இருந்த சரத் பொன்சேகா எம்.பி., நான் கூறுவதைக் கேளுங்கள் என்றார்.

ஆவேசமடைந்த அமைச்சர் சமல், 'நான் எதனைக் கேட்க வேண்டும், உனது வீரத்தை என்னிடம் காட்ட வேண்டாம். நீ ஒரு கழுதை' - என்று ஆவேசப்பட்டார்.

இதையடுத்து அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கும், சரத் பொன்சேகா எம்.பிக்கும் இடையில் தகாத வார்த்தைப் பரிமாற்றங்களால் வாக்குவாதம் ஏற்பட்டது.

சரத் பொன்சேகாவின் வார்த்தைப் பிரயோகங்கள் கடுமையாக இருந்த நேரத்தில் வெளியில் வா நான் யார் எனக் காட்டுகின்றேன் என்று அமைச்சர் சமல் எச்சரிக்கை விடுத்தார்.

## யாழ்.காவல் படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அந்தவகையில், யாழ். மாநகர சபையின் மேயர், ஆணையாளர் மற்றும் உறுப்பினர் உள்ளிட்டோரிடம் வாக்குமூலங்களை யாழ்ப்பாணம் பொலிஸார் பதிவு செய்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாநகரத்தை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் பொருட்டு, மாநகர சபையால் மாநகர காவல் படை ஒன்று நேற்றுமுன்தினம் தமது பணியை ஆரம்பித்தது. இதற்குப் பிரத்தியேகமாக சீருடை ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தப் படை மற்றும் சீருடை குறித்து சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் செய்திகள் பரவியிருந்தன.

எனினும், இதற்கு யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் நேற்று ஊடக சந்திப்பை நடத்தி விளக்கமளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடியில் கட்டடத்தில் தீ!



மட்டக்களப்பு காத்தான்குடி பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் கட்டடம் கடந்த புதன் கிழமை இரவு தீப்பற்றி எரிந்ததையடுத்து தீய ணைப்பு படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந் தனர்.

குறித்த நிறுவனம் வழமைபோல புதன் மாலை யில் கடமைகள் முடிவடைந்து பூட்டப்பட்டுள்ள நிலையில் சுமார் 7 மணியளவில் கட்டடம் தீப்பற்றியது, இதனையடுத்து அந்தப் பகுதிகளில் உள்ள கடைகள் மூடப்பட்டு மக்களை வெளியேற் றியமையையடுத்து மட்டக்களப்பு மாநகரசபை தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸ் தீய ணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

இதேவேளை அந்த பகுதியில் சுமார் ஒரு மணித்தியாலம் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன் காத்தான்குடிப் பிரதேசத்துக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை காத்தான் குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மேலதிக கொடுப்பனவை வழங்கப்படாவிட்டால் கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றை நாடுவோம்

## வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை

பெருந்தோட்டத் தொழிலாளர்க ளுக்கு 1,000 ரூபா நாளாந்த சம் பளத்தை மாத்திரமே தம்மால் வழங்க முடியும் என்றும், மேலதிக கொடுப் பனவு உள்ளிட்ட ஏனைய சலுகை கள் வழங்கப்பட மாட்டா என்றும் கம் பனிகள் தெரிவித்துள்ளன. அவ் வாறு மேலதிக கொடுப்பனவு வழங் கப்படாவிட்டால் கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகை யில் –

பெருந்தோட்டத் தொழிலாளர்க ளுக்கு 1,000 ரூபா நாளாந்த சம் பளத்தை வழங்குமாறு அறிவித்து வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்த மானி அறிவித்தலுக்கு இடைக் காலத்தடையுத்தரவு பிறப்பிக்கு மாறு கம்பனிகள் வழக்குத் தாக்கல் செய்திருந்தன.



எனினும் நீதிமன்றத்தால் கம்ப னிகளின் கோரிக்கைக்கு ஏற்ப இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக் கப்படவில்லை.

எனவே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினமான மார்ச் 5 ஆம் திகதி முதல் நாளாந்த சம்பளம் 1,000 ரூபா என்ற அடிப்படையில் நிலுவைக் கொடுப்பனவையும் இணைத்து இம்மாதம் 10 ஆம் திகதி முழுமையான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

தற்போது நீதிமன்றத்தின் தீர்ப்பிற் கமைய 22 கம்பனிகளும், அரசாங் கத்தால் நிர்வகிக்கப்படுகின்ற தோட்ட முகாமைத்துவமும் 1,000 ரூபா நாளாந்த சம்பளத்தை நிச்சயம் வழங்க வேண்டும்.

எனினும் 1,000 ரூபா சம்பளத்தை மாத்திரமே தம்மால் வழங்க முடியும் என்றும், மேலதிக கொடுப்பனவு ஏனைய கொடுப்பனவுகள் வழங் கப்பட மாட்டா என்றும் கம்பனிகள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த அறிவிப்பின் மூலம் கம் பனிகள் அரசாங்கத்தால் வெளி யிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை மீறுவதற்கு முயற்சிக் கின்றனவா? அல்லது நீதிமன் றத்தை அவமதிக்கின்றனவா? கம்ப னிகளின் இவ்வாறான வஞ்சித் தல்களை முறியடிக்க சகல தொழிற் சங்கங்களும் ஒன்றிணைய வேண் டும்.

இது கம்பனிகளால் தொடரப்பட்ட வழக்கிற்கு கிடைத்துள்ள தீர்ப்பாகும். எனவே அவை நீதிமன்றத்தின் உத் தரவிற்கமைய செயற்பட வேண்டும். அவ்வாறில்லை எனில் கம்பனிக ளுக்கு எதிராக நாம் நீதிமன்றம் செல்ல வேண்டியேற்படும். – என்றார்.

# அனைத்து சமூகங்களையும் தீவிரவாதத்துக்கு எதிராக ஒன்றிணைக்க வேண்டும் - அலி சப்ரி

சமூகங்களை ஒன்றிணைத்து சமாதானத்தை நிலைநாட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர் களும் பொறுப்பேற்க வேண்டும் என நீதி அமைச்சர் அலி சப்ரி கேட்டுக்கொண்டுள்ளார்.

2019 பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்தக் கோரிக் கையை முன்வைத்தார்.

தீவிரவாதத்துக்கு எதிராக நாம் அனைத்துச் சமூ கங்களையும் ஒன்றிணைக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# சில மாதங்களுக்குப் பின் மெல்பேனில் இறங்கிய ஸ்ரீலங்கா ஏயர்லைன்ஸ் முதல் பயணிகள் விமானம்

விக்டோரியாவின் சர்வ தேச ஹோட்டல் தனிமைப் படுத்தல் திட்டத்தின் கீழ் பல மாதங்களுக்கு பின்னர் மெல்பேனில் தரையி றங்கிய முதல் பயணிகள் விமானம் என்ற பெரு மையை ஸ்ரீலங்கா ஏயர் லைன்ஸ் விமானம் பெற் றுள்ளது.



அதன்படி ஸ்ரீலங்கா ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல் – 604 என்ற விமானம் அந் நாட்டு நேரப் படி வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் மெல்பேன் விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

இந்த விமானத்தில் பயணித்த 11 பயணிகள் பஸ் மூலம் இருவார கால தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக பாதுகாப்புடன் ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை டோஹா, சிங்கப்பூர் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளிலிருந்து வரும் விமானம் மூலமாக நேற்று மொத்தம் 106 பயணிகள் வந்தார்கள் என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் பயணிகள் விமானங்கள் விக்டோரியா மாநிலத்தில் தரையிறங்கவில்லை. கொவிட் –19 அச்சுறுத்தல்கள் காரண மாக ஹோட்டல்கள் தனிமைப்படுத்தல் நடவடிக்கையிலிருந்து விலகின. மற்றும் மாநிலத்தின் பல பகுதிகளும் முடக்கல் நிலையில் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதக் கருத்துக்களை பரப்பிய இருவர் ஒலுவில் பகுதியில் கைது

அம்பாறை, ஒலுவில் பகுதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நிறைவு செய்த மாணவர்களுக்கு தீவிர வாத சித்தாந்தங்கள் தொடர்பான சொற் பொழிவை நடத்தியமைக்காக இரு சந்தேக நபர்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒலுவில் பகுதியில் வசிக்கும் 30 மற் றும் 39 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் தமது சொற்பொழிவுக்காக பல்வேறு சர்வதேச பயங்கரவாத அமைப் புகளின் காணொலி காட்சிகள் மற்றும் விரிவுரைகளின் உள்ளடக்கத்தை பயன் படுத்தினர் எனவும் பொலிஸார் கூறியுள் ளனர்.

அது மாத்திரமன்றி மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிக்கப்பட்டதாகவும், அதனை ஏற்க மறுக்கும் மாணவர்கள் சந்தேக நபர்களால் தாக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் கைதான நபர்கள் கொழும்பில் உள்ள பயங்கரவாத புல னாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் முக்கிய குற்றவாளியான சஹ்ரான் ஹாஷிம் இந்த இருவருக்கும் பயிற்சி அளித்தார் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 19 கலீபா அப்துல் காதர் வீதி ஆதன இல 168 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் M.S.M குசேன் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு J.S.A. மதுரநாயகம் முகதாவில் 2911 ஆம் இலக்க 26.09.2016 ஆம் திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் அப்துல் காதர் முஹம்மது பதுர்தீன் (453172228V) உம் பெண் முஹம்மது பதுர்தீன் அக்தாறுன்னிஸா (555263139V) உம் ஆகியவர்கள் குறித்த ஆதனம் தமக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணம் கலீபா அப்துல் காதர் வீதி இல 168ச் சேர்ந்த அப்துல் காதர் முஹம்மது பதுர்தீன் உம் பெண் முஹம்மது பதுர்தீன் அக்தாறுன்னிஸ்வும் அறுதியாக பிரசித்த நொத்தாரிசு M.S.F.Roshana முகதாவில் வரையப்பட்ட 766 ஆம் இலக்க 26.11.2019 ஆம் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை மொகமட் உசனார் மொஹமட் தாஹிர்க்கு வழங்கியுள்ளார்.

பின்னர் அதேமுகவரியைச்சேர்ந்த முஹம்மது உசனார் முஹம்மது தாஹிர் மற்றும் பெண் ஜுனைத்தா பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் 1798 ஆம் இலக்க 30.09.2020 ஆம் திகதி அறுதி உறுதி மூலம் இல.08 அசனா லெப்பை ஒழுங்கை யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த றஜப் அஸ்கர் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்:-** யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணைகோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறைபிரதேசசெயலகம் யாழ்ப்பாணம் கிராமசேவையாளர் பிரிவு J/86 யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "பிச்சைக்குளம் கரை" பதினேழு தசம் எட்டு ஐந்து குளிகள் கொண்ட ஆதனமும் இக்காணிக்குள் இருக்கும் கிணறு பயிர்வகைகள் உள்ளிட்டவையும் இதன் எல்லைகள்.

**கிழக்கு:-** K.I.M. பெண் அனீஷாவின் ஆதனமும் ஆறுமுகம் மகேந்திரராசாவின் ஆதனமும்

**வடக்கு:-** கலீபா அப்துல் காதர் வீதி

**மேற்கு:-** முகமட் றுஷான் பாத்திமா ரீசானாவின் ஆதனம்.

**தெற்கு:-** ஆறுமுகமும் மகேந்திரராஜாவின் ஆதனம்.

இதடங்கலும் இதற்கு சேர்ந்தவைகளும்

தற்போது றஜப் அஸ்கர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமா னது றஜப் அஸ்கா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப் பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகரசபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## ஜெனிவா விளைவு என்ன?

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கைத் தமிழர் தரப்பின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் இல்லை என்றும் –**

**தமிழர்கள் எதிர்பார்த்த தீர்மானம் நீர்த்துக் போகச் செய்த வகையில் பயனற்று நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் –**

**தமிழர் தரப்புகள் சில இங்கு பரவலாக கருத்துக்களைப் பரப்பி வருகின்றன. ஜெனிவா விவகாரம் தமிழருக்குத் திருப்தி தரும் வகையில் நகரவில்லை என்ற அதிருப்தியை தமிழர் மத்தியில் விதைப்பதில் அத் தரப்புகள் முனைப்பாக இருக்கின்றன.**

**ஜெனிவா விவகாரத்தைத் தமிழர் தரப்பில் கையாண்ட சக்திகளை செல்வாக்கு ரீதியாகப் பலவீனமாக்குதல் என்ற அரசியல் நகர்வின் ஓர் அங்கமாக இத்தகைய தவறான கற்பிதங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவோ என்னவோ...!**

**ஆனால், ஜெனிவாவில் உண்மையாக நடைபெற்றது என்ன என்பது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியாக முன்னர் பணியாற்றிய தாமரா குணநாயகம் தமிழிலேயே விரிவான பேட்டி ஒன்றை அளித்திருக்கின்றார். அவர் கூறிய விடயங்கள் நோக்கற்பாலவை.**

**ஐ.நாவிற்குரிய ஆணையை – பட்டயத்தை – மீறி இலங்கை விடயத்தில் ஒரு தீர்மானம் ஜெனிவாவில் எடுக்கப்பட்டிருக்கின்றது. உலக நாடு ஒன்றுக்கு எதிராக இப்படி ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார்.**

**"யுத்த காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரித்து, எதிர்காலத்தில் குற்றவியல் நடவடிக்கைகளை (Criminal Proceedings) எடுக்கக் கூடியதான சாட்சியங்களை, சான்றுகளைச் சேகரிக்கும் செயற்பாட்டை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தானே முன்னெடுக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆனால், ஐ.நா. பட்டயத்தின் படி, அப்படி ஒரு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கோ, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கோ ஏன், ஐ.நா. பொதுச் சபைக்கோ கூட இல்லை.**

***"ஆக, ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு மட்டுமே சில மட்டுப்படுத்தல்களுடன் இத்தகைய விடயங்களைக் கையாள அனுமதி உண்டு. அது கூட உலக சமாதானம், அமைதிக்கு அச்சுறுத்தல், நாடுகளுக்கு இடையில் யுத்தம் நடைபெறும் வாய்ப்பு போன்ற பின்புலத்தில்தான் பாதுகாப்புச் சபையால் முன்னெடுக்கப்பட முடியும்"*** **என்று சுட்டிக் காட்டும் அவர், ஆகையினால் இலங்கை விடயத்தில் ஜெனிவா அமர்வில் இம்முறை இலங்கைக்கு எதிராக ஐ.நா. பட்டயத்தை மீறித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் குமுறுகின்றார்.**

**ஜெனிவா தீர்மானத்தை ஒட்டி அவர் விளக்கும் இன்னொரு விவகாரமும் கவனிக்கத்தக்கது.**

**இலங்கைத் தரப்புக்கு எதிராக எதிர்காலத்தில் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான சான்றுகளை, சாட்சியங்களை சேகரித்து, களஞ்சியப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலே 13 அதிகாரிகளை நியமித்துக் காரியமாற்றவுள்ளது. அதற்காக முதல் கட்டமாக 28 லட்சம் டொலர் செலவிடப்படவிருக்கின்றது. அதற்குரிய 'பட்ஜெட்' சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

**இதில் இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டும் என்கின்றார் தாமரா குணநாயகம்.**

**ஒன்று – சேகரிக்கப்படும் இந்த ஆவணங்கள், சான்றுகள், சாட்சியங்கள் எங்கு, யாருக்கு எதிராகப் பயன்படுத்தப்படப் போகின்றன என்பது.**

**அடுத்தது – இதற்கான நிதியை அளிப்பவர்கள் யார் என்பது.**

**யுத்த காலத்தில் இலங்கையில் சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அது பயன்படுத்தப்படும். அதுவும் எங்கு? ஐ.நாவின் நீதிமன்றங்களிலோ அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலோ அல்ல. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான தனது பரிந்துரையில் கூறியபடி தனித்தனி நாடுகளில் – பெரும்பாலும் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளில்.**

**இந்தச் சாட்சியே சேகரிப்புக்கான நிதியை ஐ.நா. பொதுச் சபை தனது ஒதுக்கீட்டிலிருந்துதான் அளிக்க வேண்டும். அளிக்கின்றது. பொதுச் சபைக்கான செலவுகளை அங்கத்துவ நாடு என்ற முறையில் இலங்கையும் சேர்ந்துதான் வழங்குகின்றது.**

**ஆக, இலங்கை அளிக்கும் பணத்தையும் சேர்த்து – பங்கையும் சேர்த்து – ஒதுக்கப்படும் நிதியின் மூலம் சாட்சியங்கள், ஆவணங்களை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் சேகரித்து, இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகளில் குற்றவியல் நடவடிக்கையைத் தொடர்வதற்கு ஏற்பாடு செய்யப் போகின்றது.**

**இது இலங்கையின் விரலைக் கொண்டு இலங்கையின் கண்களைக் குத்தும் வேலை என்கின்றார் தாமரா குணநாயகம்.**

**ஆனால், நாமே ஜெனிவாத் தீர்மானம் பயனற்றது என்கின்றோம். இதில் எது உண்மை?**

# யாழ். மாநகரசபை உறுப்பினர்களின் புதல்வர்களுக்கு பின்கதவால் முறையற்ற நியமனம் எனக் குற்றச்சாட்டு

## நேற்று மாதாந்த அமர்வில் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஏப்.09

யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஈ.பி.டி.பி. மற்றும் மணிவண்ணன் சார்பிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களின் புதல்வர்களிற்கு தற்போதைய முதல்வர் சபை விதிமுறைகளிற்கு முரணாக நியமனம் வழங்கியுள்ளார் எனக் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2021ஆம் ஆண்டிற்கான இரண்டாவது விசேட கூட்டம் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பிரதான நூலகத்தின் மாநகர மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின்போதே மேற்படி விடயம் தொடர்பில் உறுப்பினர்கள் தமது கண்டனத்தை பதிவு செய்தனர்.

தற்காலிக உறுப்பினர்கள் விடயம் தொடர்பில் எழுந்த கருத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ந.லோகதயாளன் இது தொடர்பில் தனது கருத்தை தெரிவிக்கையில் –

மாநகர சபையிலே டெங்கு ஒழிப்பு வேலை, வாய்க்கால் துப்பரவுப்பணி என்பவற்றிற்கு மட்டுமே அடிக்கடி பணியாளர்களை நியமிக்க முடியும். அவ்வாறு நியமிப்பவர்களை யும் வாய்க்கால் மற்றும் வீதித் துப்பரவு வேலைகளில் மட்டுமே ஈடுபடுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் அலுவலகப் பணிக்கு மாற்றக் கூடாது என்ற நிபந்தனையிலேயே சபை அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கிய அனுமதியை பயன்படுத்தி தற்போதைய முதல்வரான மணிவண்ணன் தனது அணியை சேர்ந்த ஓர் உறுப்பினரது புதல்வனிற்கும் தனக்கு விசுவாசமாக வாக்களித்த ஈ.பி.டி.பி. உறுப்பினரின் மகனிற்கும் அலுவலகத்தில் வேலை வாய்ப்பு வழங்கியுள்ளமையோடு தனது ஊர்க்காரர் என்ற வகையில் சபையின் எல்லைப் பரப்பிற்குள் உள்ள ஒருவருமாக மொத்தம் மூவருக்கு இரகசியமாக அலுவலக நியமனம் வழங்கியுள்ளார். இதற்கு ஆணையாளரும் உடந்தையாக அவர்களைப் பணியாற்ற அனுமதி வழங்கியுள்ளார்.

இது திறமையின் அடிப்படையிலான நியமனமும் கிடையாது. நாம் தற்காலிக ஊழியர்கள் எனில், சபை எல்லைப் பரப்பிற்குள் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கி, எல்லைப் பரப்பிற்குள் இல்லாத பட்சத்திலேயே வெளியே தேட வேண்டும் என விதிக்கப்பட்ட நிபந்தனைக்கு மாறாக இது சத்தம் சந்தடியின்றி வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சபையை நம்பி வாக்களித்த மக்களிற்கும், சபைக்கும், வரி செலுத்துவோருக்கும் தற்போதைய முதல்வர் துரோகம் இழைத்து வழங்கிய இந்த மூன்று நியமனங்களும் நிறுத்தப்பட வேண்டும். அதுவரை எந்தக் கொடுப்பனவையும் அதிகாரிகளுக்கு வழங்கக் கூடாது. – என்றார்.

இதன்போது உறுப்பினர் ப.தர்ஷானந் கருத்து தெரிவிக்கையில் –

அரசியல் சுயலாபத்திற்காக சபை எல்லைப் பரப்பிற்குள் அடங்காத, சபைக்கு தெரியாத நியமனத்தை நிராகரிக்க வேண்டும்.– என்றார்.

இவற்றிற்கு பதிலளித்த ஆணையாளர்–

ஏற்கனவே வாய்க்கால் பணிக்கு அனுமதித்த எண்ணிக்கையில் பணிக்கு வராத ஊழியர்களின் இடத்திற்கு முதல்வரின் உத்தரவின் பெயரில் எடுக்கப்பட்டது. இதனையே முன்னைய முதல்வரும் மேற்கொண்டார்.– எனப் பதிலளித்தார்.

இதன்போது குறுக்கிட்ட உறுப்பினர் நித்தியானந்தன் தவறை எவர் செய்தாலும் தவறுதான். ஆனல்ட் செய்தார், அதனாலேயே இந்த முதல்வரும் செய்கின்றார் என ஆணையாளர் கூறுவதனை ஏற்க முடியாது. – என்றார்.

இவ்வாறு நீண்ட சர்ச்சை ஏற்பட்ட விடயத்திற்கு பதிலளித்த மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் இந்த விடயத்திற்கான பதிலை அடுத்த மாதாந்த கூட்டத்தில் வழங்குகின்றேன் எனத் தெரிவித்து விடயத்தைத் தள்ளி வைத்தார்.





**இந்தியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்தானிகராக நியமனம் பெற்றுள்ள துரைசாமி வெங்கடேஸ்வரனுக்கு கொழும்பு புதுச் செட்டித் தெருவில் உள்ள சீரடி சாயி பாபா ஆலயத்தில் நேற்று வரவேற்பு அளிக்கப்பட்டது. இதன்போது சீரடி சாயி மத்திய நிலைய தலைமை அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் வெங்கடேஸ்வரனை கௌரவிப்பதையும், அருகில் ஊடகத்துறை இணைப்பாளர் சிவா இராஜஜோதி நிற்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.**

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து வவுனியாவில் ஓட்டோ விபத்து



வவுனியா நூலக வீதியில் நேற்று (வியாழக்கிழமை) காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் முதியவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நூலக வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு முன்பாக சாரதியின் கட்டுப்பாட்டை யிழந்து வீதியிலிருந்து கீழிறங்கி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோவின் சாரதியான முதியவர் ஓட்டோவுக்குள் சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து இடம்பெற்ற இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட சிங்கள சமூகமொன்று உருவாகும்

## எதிர்வு கூறுகிறார் சாணக்கியன்




தமிழ், முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டிவிட்டால் அதில் மகிழ்ச்சியடைவது சிங்கள சமூகமே, ஆனால் நாட்டில் இன்று ஏற்பட்டு வரும் சீன ஆக்கிரமிப்பால் எதிர்காலத்தில் சிங்கள சமூகத்துக்கு இடையிலேயே கிளர்ச்சியொன்று உருவாகும், அவ்வாறான நிலையில் அதிகாரத்தைக் கையில் எடுக்கும் நோக்கத்தில் மீண்டும் ஒரு சமூகத்துக்கு எதிரான அடக்குமுறை உருவாகலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சபையில் தெரிவித்தார்.

தமிழர்களுக்குக் கடந்த காலத்தில் ஏற்பட்ட அதே அசாதாரண செயற்பாடுகளே முஸ்லிம் சமூகத்துக்கும் ஏற்பட்டது. அதன் விளைவாகவே ஈஸ்டர் தாக்குதலும் ஏற்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இலங்கையர்கள் தொடர்பில் வெளிநாட்டவர் மத்தியில் நல்லதோர் எண்ணப்பாடு உள்ளது. இலங்கையர்கள் இரக்கம் கொண்டவர்கள், நல்லவர்கள் என்ற நல்லதொரு விம்பம் உள்ளது. இலங்கையர்கள் வெளிநாட்டவர்களிடம் அன்பாக இருந்தாலும் கூட சக இலங்கையர்களிடம் அவ்வாறு இருப்பதில்லை. 1949 ஆம் ஆண்டில் அப்போதைய மலையக இலங்கையர்களை நாட்டில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்ட போதே இது வெளிப்பட்டது. தமிழர்கள் என்ற பாகுபாடு பார்க்காது நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு இவர்களை கொண்டு முன்னெடுத்து செல்வது என நினைத்துப்பார்க்காது வெளியேற்றினர். பிற்பட்ட காலத்திலும் தமிழர்கள் வெளியேறினர், பறங்கியர்கள் வெளியேறினர். இறுதியாக நாட்டில் எஞ்சியது ஒன்றும் இல்லை.

வெவ்வேறு காலகட்டத்தில் இந்த அரசியல் இடம்பெற்றது, தேசிய ரீதியில் தமிழர்கள் கல்வி கற்க முடியாத, விவசாயம், ஏனைய வியாபாரங்களில் ஈடுபட முடியாத நிலைமை உருவாக்கப்பட்டது. அவர்கள் நாட்டை விட்டு வெளியேறி இன்று வெவ்வேறு நாடுகளில் நல்ல நிலைமையில் உள்ளனர். முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. அவர்கள் சிறந்த வியாபாரிகள், அவர்களை வைத்து நாட்டின் வியாபாரத்தை எவ்வாறு முன்னேற்றுவது என்பது தொடர்பாக ஆராய அவர்களை மோசமாக விமர்சித்து அவர்களுக்கு எதிராகப் பெரும்பான்மைச் சமூகம் தூண்டிவிடப்பட்டனர். தமிழர்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட அதே அசாதாரண செயற்பாடுகளே முஸ்லிம் சமூகத்திற்கும் ஏற்பட்டது. அவர்கள் தொடர்ச்சியாக நெருக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டும், அவர்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்ற காரணத்தால் தான் ஈஸ்டர் தாக்குதலும் ஏற்பட்டது.

ஆனால் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும், அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கம் இரண்டு வாரத்தில் குற்றவாளிகளைக் கண்டறிந்து நிலைமைகளை கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது. தப்பித்தவறியேனும் இன்றைய அரசாங்கமே அப்போதும் ஆட்சியில் இருந்திருந்தால் இதை வைத்தே அரசியல் செய்திருப்பார்கள். இன்றும் அதனையே செய்து வருகின்றனர். அதேபோல் இந்த நாட்டில் தமிழர்கள் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்படும் வேளையில் சிங்களவர்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். ஆனால் சிங்கள மக்களுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுக்கின்றேன், எதிர்காலத்தில் நாட்டில் உருவாகும் நெருக்கடி நிலைமையில் சிங்கள மக்கள் மத்தியில் புரட்சி ஒன்று உருவாகுமானால் அப்போது என்னவாகும் என்பதை சிந்தித்து பாருங்கள். இப்போது சீனாவின் ஆக்கிரமிப்பு, அவர்களின் வர்த்தக ஆக்கிரமிப்பு காரணமாக எதிர்காலத்தில் நிச்சயமாக நாட்டில் பாதிக்கப்பட்ட சிங்கள சமூகமொன்று உருவாகும், அப்போது மீண்டும் நாட்டில் கிளர்ச்சி ஒன்று உருவாகும். இலங்கைக்குள் சிறுபான்மை மக்களுக்கு எதிராக முரண்பாடுகளை ஏற்படுத்தி அரசியல் செய்யும்கலாசாரத்தைக்கைவிடவேண்டும்.

இன்று நாட்டின் நிலைமையில் அடுத்து ஏதேனும் ஒரு சமூகத்தைத் தாக்கி அரசியல் செய்ய ஏதேனும் திட்டம் தீட்டப்பட்டுள்ளதா என்ற பயமும் எமக்கு உள்ளது. குறுகிய காலத்தில் பலவீனமான ஆட்சியே இன்று உருவாகியுள்ளது, எனவே, அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ள சமூகத்துக்கு எதிரான தாக்குதலை நடத்தத் திட்டம் தீட்டவும் இவர்கள் அஞ்சப்போவதில்லை. இன்று தமிழ் மக்கள் தமது உறவுகளைத் தேடி அலைவதைப் போலவே இன்னும் பத்து ஆண்டுகளில் கிறிஸ்தவ சமூகமும் ஈஸ்டர் தாக்குதலுக்கான நியாயத்தைத் தேடி அலைய வேண்டிய நிலைமை உருவாகும். –என்றார்.

# பயங்கரவாதிகளுக்கு ஆதரவானவர்களே மனித உரிமைகள் பற்றிப் பேசுகிறார்கள்

## சுதர்ஷினி குற்றச்சாட்டு



நாட்டில் மனித உரிமைகள் தொடர்பில் பேசுபவர்கள், புலம்பெயர் தமிழர்களின் (டயஸ்போரா) தேவைகளுக்கேற்ப பயங்கரவாதிகளுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார்கள்.

எனினும் பயங்கரவாத செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சார்பாகப் பேசுவதற்கு அவர்கள் முன்வராதமை கவலையளிக்கிறது என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் – 19 நோய்க்கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேவின் 13 ஆவது நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டில் எத்தகைய பயங்கரவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றை முடிவிற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அனைத்து அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும். அதனூடாக இந்த நாட்டைப் பாதுகாத்து எமது எதிர்கால சந்ததியினரிடம் கையளிக்கவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை மனித உரிமைகள் தொடர்பில் பேசுபவர்கள், புலம்பெயர்தமிழர்களின் தேவைக்கேற்ப பயங்கரவாதிகளையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள்.

எனினும் எனக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தட்டிக்கேட்பதற்கு எவரும் இல்லை. இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நீதிமன்றத்தீர்ப்பு எதுவாக இருப்பினும், நான் இழந்தவற்றை மீளப்பெற முடியாது.

பயங்கரவாதச் செயற்பாடுகளின் விளைவாக என்னைப் போன்றுகணவனை, பிள்ளையை, உறவினர்களை இழந்த பலர் இருக்கின்றார்கள். எனினும் அவர்கள் சார்பாகப் பேசுவதற்குத் தற்போது மனித உரிமைகள் தொடர்பில் பேசுபவர்கள் முன்வராமை கவலையளிக்கிறது என்றும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாகவே ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் நினைவுதின நிகழ்வு சாதாரணமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

இந்நிகழ்வில் மகாசங்கத் தேரர்கள், கத்தோலிக்க மற்றும் ஏனைய மதத்தலைவர்கள், முன்னாள் அமைச்சர் டுலிப் விஜேசேகர உள்ளிட்டோரும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேவின் குடும்ப உறுப்பினர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜவுளி துணிகள் இறக்குமதி தடை



ஜவுளி துணி இறக்குமதியை அரசாங்கம் தடைசெய்துள்ளதாக பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவிப்புக்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அனைத்து ஜவுளி துணிகள் மற்றும் அச்சிடப்பட்ட பற்றிக் இறக்குமதிகள் தடை செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

# ஈஸ்டர் தாக்குதலால் கோட்டா ஜனாதிபதி ஆனவர் அல்லர்

## என்கிறார் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

உயிர்த்த ஞாயிறு தாக்குதலே கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டின் ஜனாதிபதியாக்கியதாக எதிர்க்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதுடன், தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எவ்வித ஆயத்தமும் இருக்கவில்லையென இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் அதள பாதாளத்தை நோக்கிச் சென்றதுடன், சுற்றுலாத்துறையும் வீழ்ச்சி கண்டிருந்தது. இனங்களுக்கு இடையில் சந்தேகக்கண் கொண்டு பார்க்கும் நிலையும் உருவானது.

ஒட்டுமொத்தமாக சமூகத்துக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாரிய அழிவு ஏற்பட்டது. இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஏனைய தேர்தல்கள் பற்றியும் கருத்தாடல்கள் இடம்பெற்றிருக்கவில்லை.



புதிய அரசாங்கம் அமையவும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமென எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட, சஹ்ரானின் தாக்குதல் அவசியமில்லை.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதி, பிரதமருக்கு இடையில் காணப்பட்ட பொருத்தமற்ற கொள்கைவேறுபாடுகள், மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடியின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சமூக எழுச்சி, தேசியப் பாதுகாப்பில் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணம். – என்றார்.

# புலிகளின் தலைவர் படத்தை தொலைபேசியில் வைத்திருந்தவர் கோப்பாயில் வைத்து கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் ஒளிப்படத்தை தொலைபேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120 ஆம் பிரிவின் கீழ் வெறுப்பைத் தூண்டுதல் அல்லது எத்தணித்தலின் கீழ் இளைஞன் மீது B அறிக்கையை கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

இளைஞன் சார்பில் மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் முன்னிலையானார்.

வழக்கை விசாரித்த நீதிவான் இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்து இளைஞனை எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, இளைஞனின் தொலைபேசியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் ஒளிப்படம் உள்ளமை தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

2008 முதல் 2016 வரை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக இருந்தவர் தென்னாபிரிக்காவின் தமிழர் வம்சாவளியைச் சேர்ந்த நவநீதம்பிள்ளை. இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணைக்குழுவில் இடம்பெற்றிருந்த அவர் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திலும் நீதியரசராகப் பணியாற்றியிருக்கின்றார். கடந்த மாதம் 20 ஆம் திகதி வடக்கு முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் 'தமிழர் தாயக இழப்பு: தமிழர் நிலத்தை பேணுவது தொடர்பில் பிரச்சினைகளை அடையாளம் காணுதலும் தந்திரோபாயங்களை வகுத்தலும்' என்ற தலைப்பில் நடைபெற்ற மெய்நிகர் கருத்தரங்கில் பிரதான பேச்சாளராகக் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டார். அப்போது இலங்கையில் இனவழிப்புத் தொடர்பாக அவரிடம் கேட்கப்பெற்ற கேள்விகளும் அவரின் பதில்களும் இங்கு பிரசுரமாகின்றன.



# இலங்கையில் இனவழிப்பு நடந்ததா? நீதி ஆயம்தான் தீர்மானிக்க வேண்டும்!

## முன்னாள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அது தொடர்பில் விளக்குகின்றார்

**கேள்வி 1:-** 2013 இல் நீங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராக இருந்த காலத்தில் Colombo Gazette இற்கு வழங்கிய செவ்வியொன்றில், நீங்கள் இலங்கையில் சந்தித்த எந்தவொரு நபரும் இனவழிப்பு எனும் சொற்பதத்தினை உபயோகிக்கவில்லை என்று தெரிவித்திருந்தீர்கள். மேலும் ருவாண்டா தேசத்தின் நிலைமைகளோடு ஒப்பிட்டு இங்கு இனவழிப்புக்கான தெளிவான நிகழ்வுகள் காணப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தீர்கள். ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாய சபையிலே (ICTR) ஒரு நீதிபதியாக இருந்த அனுபவத்தின் அடிப்படையில் அங்கு நடைபெற்றது இனவழிப்பே என்று தெரிவித்தீர்கள், பெரும்பான்மை தமிழர்களை பொறுத்தவரை இலங்கையில் இடம்பெற்றது இனவழிப்பு என்றே கருதப்படுகின்றது. கடந்த 65 வருடங்களுக்கு மேலாக பெரும்பான்மையான தமிழ் அரசியல் பிரமுகர்கள் இதனையே வாதாடியுள்ளனர். இலங்கை அரசானது தமிழீழத்தினை அழித்ததோடு மட்டுமல்லாது வேண்டுமென்றே அவர்களை துன்புறுத்தி, முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ வாழ்க்கை நிலைமைகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதோடு இன்று பரவலாகப் பேசப்படுகின்ற அரச தலைமையிலான தமிழர் நில அபகரிப்பு என்பது திட்டமிட்ட இனவழிப்பு நோக்கத்துடனேயே முன்னெடுக்கப்படுகின்றது. நடைமுறையின் சிந்தனைப்போக்கு, சிங்கள இராணுவமயமாக்கல் மற்றும் காலனித்துவத்தின் திட்டங்கள் என்பன இனவழிப்பு என்பதனை தெளிவாக காண்பிக்கின்றன. உங்களுக்கான கேள்வி, ஏன் உங்கள் நிர்வாகத்தின் கீழிருந்த மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் (OHCHR) இலங்கைக்கான விசாரணைகள் OISL இனவழிப்பு குற்றத்தினை ஆராய்வதை தவிர்த்தது?

**பதில்:-** தீர்மானம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து இனப்படுகொலை தொடர்பான உலகின் முதல் தீர்ப்பில் பங்கேற்ற நீதிபதி நான் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே விரைவான பதிலினை வழங்குகிறேன். அனைத்து ஆதாரங்களையும் கேட்டதன் பின் ஒரு நீதிமன்றம் மட்டுமே இனப்படுகொலை இடம்பெற்றதா என்பதை தீர்மானிக்க முடியும். இனப்படுகொலை குற்றத்தின் முக்கியமான பங்கு யாதெனில், குற்றம் சுமத்துவோர், எதிர்தரப்பின் திட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் செய்கைகள் அனைத்திலும் இனப்படுகொலைக்கான நோக்கம் இருந்ததென்பதை நிரூபிக்க வேண்டும். இதனாலேயே மனித உரிமை ஆர்வலர்கள் இச்சொல்லை இலகுவில் பயன்படுத்துவதில்லை. அவ்வாறே வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகளும் உபயோகிப்பதில்லை. ஆனால் ஊடகவியலாளர் உபயோகிப்பர். அவ்வாறே ஆர்வலர்கள் மிகவும் உணர்வுபூர்வமாக துன்பங்கள் மிக அதிக அளவில் இருக்க வேண்டும் என்பர். 'மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்' கூட 'இனப்படுகொலை' போலவே கடுமையானவை என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். எனவே என்றாவது ஒருநாள் இலங்கையில் இடம்பெற்ற, இன்னும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் விடயங்களுக்காக குற்றவியல் அதிகார வரம்புக்குள் பரிசீலிக்கப்பட்டு – அது சர்வதேச குற்றவியல் நீதிமன்றமாகவோ அல்லது கலப்பு நீதிமன்றமாகவோ அல்லது சிறப்பு தீர்ப்பாயமாகவோ இருக்கலாம் – எங்கேனும் ஆதாரங்களை ஆராய்ந்து அத்தீர்மானத்தினை எடுக்குமென நம்புகிறேன். நான் உயர்ஸ்தானிகராக இருந்த காலத்திலேயே OISL முயற்சி எடுக்கப்பட்டது. அதன் அறிக்கை நான் இளைப்பாறியதன் பின்பதாக வந்தபோதும் அது தொடர்பாக எனக்கு பதிலளிக்க முடியும். மனித உரிமைகள் பேரவையில் நாங்கள் மனித உரிமை பிரச்சினைகளை தீர்ப்பதில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறோம், பெரும்பாலும் நாங்கள், இந்த மனித உரிமை மீறல்கள் மிகவும் மோசமானவை என்று அடையாளம் காண்கிறோம். அவை மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு வழிவகுக்கும் என்றே நாங்கள் கூறுகிறோம். எனவே, OISL இனால் என்ன செய்ய முடியும், செய்யக்கூடாது என் பதில் வரையறுக்கப்பட்ட ஆணை ஏன் இருந்தது என்பதற்கான விளக்கம் இதுவாகும்.

**கேள்வி 2:-** இனப்படுகொலை குற்றச்சாட்டை ஆராய்வதற்கான நேரம் ஐக்கிய நாடுகளின் பொறிமுறைகளுக்கு வந்துவிட்டதாக நீங்கள் நினைக்கிறீர்களா?, அப்படியானால் சரியான பொறிமுறை என்ன? ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலா அல்லது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையா ? இதை தமிழர்கள் எங்கே முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்?

**பதில்:-** மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆணையே உள்ளது. அது ஐக்கிய நாடுகளில் பொதுச் சபையின் துணை அங்கமாகவும் அதன் ஆணை மனித உரிமையுமே ஆகும். எனவே மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நேரடியாக முன்வைக்க முடியாது. அதனை செய்யக்கூடிய ஒரே ஒரு அமைப்பு பாதுகாப்பு சபையே, அவர்களும் சூடானின் டாவூர் (Durfar) மற்றும் லிபியாவின் விடயங்களின் அதனை முன்னெடுத்தும் உள்ளனர். எனவே இந்த முன்மாதிரி, குறிப்பாக சிவில் சமூகத்திலிருந்து போதுமான அழைப்பு மற்றும் அழுத்தம் உள்ள போது, உங்கள் நீதிக்கான அழைப்பில் போதிய ஆதரவினை திரட்டக் கூடுமாக இருப்பின், பாதுகாப்பு சபையே இருக்கக்கூடிய ஒரே மாற்றுவழியாக காணப்படுகின்றது.

**கேள்வி 3 :-** இலங்கையில் தமிழர்களின் இனப்படுகொலை பற்றிய தெளிவான வழக்கு இருப்பதாக நீங்கள் இன்னும் நம்பவில்லை என்றால், நீங்கள் அவ்வாறு நம்புவதற்கு காரணம் என்ன?

**பதில் :** எல்லா ஆதாரங்களையும் கேட்டபின் ஒரு நீதிமன்றத்தால் மாத்திரமே அந்த முடிவை எடுக்க முடியும். எனவே இது குறித்து எனக்கு எந்த நிலைப்பாடும் இல்லை. சில நபர்களை நான் செவிமடுத்தேன். நான் சில ஆதாரங்களை தொடர்ந்தேன். ஆனால் ஓர் இனப்படுகொலை நடந்ததா இல்லையா என்பதை தீர்மானிக்கக்கூடியது நீதிமன்றம் மாத்திரமே.

# சிறுபான்மையின மக்களின் அதிகாரங்களை பறிக்கும் வகையிலே அரசின் செயற்பாடுகள்

## வடிவேல் சுரேஷ் காட்டம்

இந்தியாவுடன் 13 பிளஸ் பற்றி பேசுபவர்கள் அதற்கு கீழ்மட்ட செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றனர். 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாக அதிகார பரவலாக்கம் வலியுறுத்தப்பட்ட போதிலும் , வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பறிக்கும் வகையிலான செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தமிழ்க் கல்வி அமைச்சு காணப்பட்டது. எனினும் தற்போது மத்திய மாகாணத்தில் தமிழ் கல்வி அமைச்சு நீக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடன் 13 பிளஸ் பற்றி பேசுபவர்கள் அதற்கு கீழ்மட்ட செயற்பாடுகளையே முன்னெடுத்துள்ளனர்.

சிறுபான்மையினர்களுக்கும் அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்தியே 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனினும் தற்போது அதிகாரப் பரவலாக்கத்துக்குப் பதிலாக அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. ஆனால் இவை அனைத்தும் குறுகிய கால செயற்பாடுகளாகும்.

வெகுவிரைவில் ஆட்சி மாற்றம் இடம்பெறும். மாகாணசபைத் தேர்தலுக்கு நாம் தயாராகவே உள்ளோம். மாகாணசபைத் தேர்தலில் மீண்டும் ஊவா மாகாணத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம். மத்திய மாகாணத்திலும் பாரிய வெற்றியைக் ஈட்டுவோம். இதன் மூலம் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் பெற்றுக் கொள்வோம். – என்றார்.

# போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் ருவன்வெல்லவில் கைது

ருவன்வெல்ல பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோணகல் தெனிய பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது போலி நாணயத்தாள்களுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரவிலஹேன பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேக நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து போலி 1,000 ரூபா நாணயத்தாள்கள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலத்தில் இவ்வாறான போலி நாணயத்தாள் மோசடிகள் இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது. அதனால் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியுடனான பேச்சு இறுதித் தீர்மானமின்றி நிறைவு

## ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு



அரசாங்கத்தை பலவீனப்படுத்த எதிர்க் கட்சியினர் திட்டமிட்ட வகையில் செயற் படுகிறார்கள். மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சுதந்திரக் கட்சியுடன் இடம் பெற்ற பேச்சு இறுதி தீர்மானமின்றி நிறைவு பெற்றுள்ளது.

கூட்டணியுடன் ஒன்றிணைந்து போட்டியிட முயற்சிக்கிறோம் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் நிகழ்வில் கலந்துக் கொண்டன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் பல சவால்களுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அரசாங்கத்தை பலவீனப்படுத்த எதிர்க் கட்சியினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றார்கள்.

ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்களும் எதிர்க்கட்சியினருக்கு ஏற்றாற் போல் செயற்படுகிறார்கள். ஒரு தரப்பினரது நோக்கம் அரசாங்கத்தை பலவீனப் படுத்துவதாக காணப்படுகிறது. இவ்வாறான செயற்பாடு மக்களாணைக்கு முரணானது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்த யோசனை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகக் கட்சித் தலைவர்கள் உறுதியான தீர்மானத்தை விரைவாக அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மாகாண சபைத் தேர்தலில் தனித்துபோட்டியிடுவதாக இதுவரை அறிவிக்கவில்லை. ஆனால்தனித்துசெல்லும்நிலைப்பாட்டில் அக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் உள்ளார்கள்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகக் கடந்த வாரம் சுதந்திரக் கட்சியினருடன் முதற்கட்ட பேச்சு இடம்பெற்றது. எவ்வித தீர்மானமும் இல்லாத வகையில் பேச்சு நிறைவு பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி ஊடாக அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ளோம்.

அரசாங்கத்தின் குறைபாடுகளை நாட்டு மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அத்தவறுகளை திருத்திக் கொள்வது அவசியமாகும். – என்றார்

# ரஞ்சனின் வெற்றிடத்துக்கு அஜித் மானப்பெரும



வெற்றிடமாகியுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற ஆசனத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பட்டியலின் அடுத்த இடத்தில் உள்ள அஜித் மானப்பெரும நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 47 ஆயிரத்து 212 விருப்பு வாக்குகளைப் பெற்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட விருப்பு வாக்குப்பட்டியலில் அஜித் மானப்பெரும ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

அதற்கமைய, ரஞ்சன் ராமநாயக்கவின் வெற்றிடத்துக்கு அஜித் மானப்பெரும நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு 4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கடந்த ஜனவரி 12 ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில், அவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தனது நாடாளுமன்ற ஆசனத்தை ரத்து செய்வதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கக்கோரி ரஞ்சன் ராமநாயக்க சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும், குறித்த ரிட் மனுவை கடந்த 5ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

இந்நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட எம்.பியான ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபையில் அறிவித்தார்.

# மகனைத் தேடிய தந்தை மரணம்: தொடரும் துயரம்



வவுனியாவில் காணாமற்போன தனது மகனைத் தேடிவந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக கடந்த புதன்கிழமை மரணமடைந்தார்.

வவுனியா தாலிக்குளம் பகுதியைச் சேர்ந்த சந்தணம் ராகவன் வயது 65 என்ற தந்தையே மரணமடைந்தவராவார்.

இவரது மகன் ராஜ்குமார் கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார் .

அவரைத்தேடி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களில் தந்தை கலந்து கொண்டு தனது மகனை கண்டு பிடிப்பதற்காக தொடர்ச்சியாகப் போராடியிருந்தார். இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நோயாளர் குறைவு; கட்டுப்பாடு தளர்வு

கொரோனாத் தொற்று காரணமாக நாளாந்தம் அடையாளம் காணப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது நாளாந்தம் அண்ணளவாக 200 நோயாளிகள் மட்டுமே அடையாளம் காணப்படுகின்றனர் என கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

இதேவேளை, குறைந்துவரும் தொற்று வீதத்துக்கு இணையாக பி.சி.ஆர். பரிசோதனைகள் படிப்படியாக குறைக்கப்படுகின்றனவே அன்றி பரிசோதனைகளின் எண்ணிக்கையை குறைப்பதால் நோயாளிகளின் எண்ணிக்கை குறையவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு புத்தாண்டு காலப்பகுதியில் பொது மக்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ



புள்ளே தெரிவித்தார்.

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய வழிகாட்டுதல்கள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன.

அதில் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு, சில தனிமைப்படுத்தல் நடைமுறைகள் உட்பட, தளர்த்தப்பட்ட விதிமுறைகள் தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காலகட்டத்தில் பயணக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படவில்லை. ஆனால் கொரோனா வைரஸ் பரவாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக பெரிய அளவிலான ஒன்றுகூடலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்தைகளின் மோசடி தொடர்பில் முறையிடுவதற்கு விசேட எண்

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவிப்பு

பண்டிகை காலத்தில் சந்தையில் நிலவும் மோசடி செயற்பாடுகள் தொடர்பாக1977 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

பண்டிகைக் காலப்பகுதியில் சந்தைக்கு வரும் காலாவதியான மற்றும் பயன்பாட்டுக்குப் பொருத்தமற்ற பொருள்களைக் கண்டறிந்து அதற்கெதிராக சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் மார்ச் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி வரை விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அனைத்து அதிகாரிகளையும் ஈடுபடுத்தி நாடு முழுவதிலும் உள்ள மாவட்டங்களில் தேடுதல் மற்றும் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதில் அதிகார சபை ஈடுபட்டுள்ளதாக சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

இதற்கமைவாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள முக்கிய மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகளை பரிசோதனை செய்வதற்காக முற்றுகையிடுவதாக அவர் கூறினார்.

காலாவதியான மற்றும் தகவல்களில் மாற்றம் செய்யப்பட்ட பொருள்கள் சந்தைக்கு வருவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

சில்லறை வர்த்தக நிலையங்களை முற்றுகையிடுவதற்காக விசாரணை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பண்டிகை காலப்பகுதியில் நுகர்வோர் பெரும் எண்ணிக்கையில் பொருள் கொள்வனவில் ஈடுபடுகின்றனர். இனிப்பு பண்டங்கள், பலசரக்கு, மின்சார உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்கள் தொடர்பில் சேவை மற்றும் தரம் தொடர்பிலும் இவர்கள் கூடுதலான கவனம் செலுத்தவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கையடக்கத் தொலைபேசி விற்பனையாளர்கள் விசேட கழிவு வழங்கி மேற்கொள்ளும் வர்த்தக செயற்பாடுகள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படும். அத்தியாவசியப் பொருள்களை பதுக்குதல், பொருள்களுக்குதட்டுப்பாடுகள்ஏற்படுவதைத் தடுத்தல், குறிப்பிட்ட பொருள்கள் மற்றும் சேவைகள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பவை தொடர்பிலும் முக்கிய கவனம் செலுத்தப்படும். பொருள்கள் மற்றும் சேவை விற்பனையில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தல், கொள்வனவு செய்யப்படும் சகல பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு பற்றுச்சீட்டு வழங்குதல் கட்டாயமாகும். இவ்வாறு செய்யாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

சந்தையில் இடம்பெறும் மோசடி தொடர்பில் முறையிடுவதற்கு 1977 என்ற தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலமும் செயற்படுவதாகவும், அலுவலக நேரங்களில் அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். அலுவலக நேரத்துக்குப் பின்னர் நுகர்வோரின் தொலைபேசி உரையாடல் பதிவு செய்யப்படுவதுடன் அதற்காக மீண்டும் அதிகாரிகள் தொடர்புகளை ஏற்படுத்தி பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அசேல பண்டார சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

- வே.வரதசுந்தரம் -

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!




04

அம்பாள் திருகோணமலையில் எழுந்தருளி இருக்கிறார் எனவும், அங்கே அவள் அருள் மழை பொழிகிறாள் எனவும், அவளது இன்னருள் மழையிலே நனைந்து இன்புறவேண்டுமாயின் தவஞ்செய்து, அவ்வருளைத் துய்ப்பதற்கு நாமெல்லாம் பக்குவமடைய வேண்டும்

**கொடியேற்ற நாளில்**
**கும்பிடும் நமக்குக்**
**கோடி செய்தாய்**
**ஆச்சிநீ காளி!**

**கொடியேற்றம் கண்டு**
**நினைத்த காரியம்**
**கைகூடும் கைகூடும்**
**ஆச்சிநீ காளி!**



திருகோணமலை நன்னகரில் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வழிபாட்டுக்கு வருகை தந்த அடியார்கள், இவ்வாறு காளி ஆச்சியை ஏத்தியேத்தித் தொழுவர்.

அதனைத் தொடர்ந்து, விவேகானந்தர் தரிசித்த காளி பற்றி அறிய விழைகின்றனர். இதோ அவர் அனுபவம்:-

'நான் தீயவர்களிலே இறைவனைக் காண்கிறேன். அனைத்து இனங்களையும் சார்ந்த ஏழைகளில் இறைவனைக் காண்கிறேன்.' - இப்படிச் சொன்னவர் ஒரு நாஸ்த்திகர் அல்லர். வீரத் துறவி விவேகானந்தர்.

சிக்காக்கோ நகரில் அன்று இடம் பெற்ற சர்வமத பாராளுமன்ற நிகழ்வில் சிம்மக் குரலில் இந்திய தத்துவச் சிந்தனையின் விழுப்பத்தினை, மாண்பினை புலமைமிக்க ஆங்கில நடையில் உறைக்கும் வண்ணம் உரையாற்றி எம்பால் உலகின் பார்வையை ஈர்த்த துறவி அவர்.

வீரத்துறவி விவேகானந்தர் ஒரு காளி பக்தர். பரமஹம்சரைக் குருவாக ஏற்றவர். பட்டினியால் வாடும் தனது குடும்பத்தினரின் ஏழ்மையைப் போக்கும் வண்ணம் பரமஹம்சரிடம் விவேகானந்தர் ஒருநாள் வேண்டிக் கொண்டார்.

'மகனே! என்னால் அத்தகு வேண்டுதலைச் செய்ய முடியாது. ஏன் நீயே தாயிடம் வேண்டுதல் செய்தாலென்ன?' என்றார் பரமஹம்சர்.

'நான் காளியை அறியேன். தாங்கள் சிபாரிசு செய்தல் வேண்டும். செய்தேயாக வேண்டும்' இப்படி அவர் வலியுறுத்தினார்.


'மகனே! நீ இன்னும் அவளை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று செவ்வாய்க்கிழமை. இன்றிரவு காளி சந்நிதானம் சென்று தாய்முன் விழுந்து வணங்கி உனது வேண்டுதலைச் செய்! உனது வேண்டுதல் நிறைவுபெறும். வேண்ட முழுவதும் தருவாள் அவள்' - இப்படிப் பரமஹம்சர் பணித்தார்.

இரவுவேளை எப்பொழுதுவரும், எப்பொழுது வரும் என்று அங்கலாய்த்த வண்ணம் அவர் பொழுது ஓடியது. இரவு ஒன்பது மணியானதும், கோயிலுக்கு போகும்படி விவேகானந்தரைப் பரமஹம்சர் பணித்தார். கோயிலை நோக்கி நடக்கும் வேளை ஆன்மீகவெறி அவரை ஆள்கொண்டது. கால்கள் நடுங்கின. இறைவி தரிசனம் கிடைக்கப் போகிறதே அவள் வார்த்தைகளைத் தன்செவிகள் கேட்கப் போகின்றனவே என்ற பெருமகிழ்ச்சி காரணமாக அவர் மனம் துள்ளித் துள்ளிப் பாய்ந்தது.

காளி சந்நிதி சென்று கற்சிலையை அவர் கண்கள் பார்த்ததும் அது உயிருள்ள அம்பாளாகவே தோன்றியது. எழில்மிக்க அழகுத் தேவதையாக, அன்பின் வடிவமாக அவருக்குத் தோன்றினாள். அன்பு பக்தி அலைகளிடையே சிக்கித் தத்தளித்தார் விவேகானந்தார்.

அன்னை காலில் மாறிமாறி வீழ்ந்து வழிபாடு செய்தார். 'எனக்கு அறிவுதா! பற்றற்ற மனம்தா! தங்கு தடையின்றி உனது காட்சி காணும் வரம்தா' - இப்படி எல்லாம் வேண்டுதல் செய்தார்.


மடத்துக்குத் திரும்பியதும், அம்பாள் வேண்டுத



லுக்கு என்ன சொன்னாள் என்று பரமஹம்சர் வினவ, அதிர்ந்து போனார் விவேகானந்தர். குடும்பச் சுமை நீக்கும்படி அம்பாளை வேண்டத்தாம் மறந்து போனார் என விளக்கினார். பரமஹம்சர் கட்டளையிட இவ்வாறு ஒருமுறை அல்ல, மூன்று தடவைகள் அம்பாளிடம் சென்றார். மூன்று முயற்சிகளிலும் அவர் தோற்றுப் போனார்.

அம்பாளைக்கண்டதும்உலகியல்தேவைகளைக் கேட்பதா என்று அவர் மனம் கூனிக் குறுகியது.

இப்படிஅம்பாள் தரிசனம் பெற்றவர் துறவி விவே



கானந்தர்.

**பண்டிதமணி கண்ட பத்திரகாளித் தாய்**

இதனையடுத்து, அடியார்கள், ஈழத்துத் தமிழ் உலகம் போற்றும் யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கோணமலையுறை காளி ஆச்சிபற்றிக் கூறியுள்ள கருத்துக்களை அறிந்து மெய்மறந்து போகின்றனர்.

அம்பாள் திருகோணமலையில் எழுந்தருளி இருக்கிறார் எனவும், அங்கே அவள் அருள் மழை பொழிகிறாள் எனவும், அவளது இன்னருள் மழையிலே நனைந்து இன்புற வேண்டுமாயின் தவஞ் செய்து, அவ்வருளைத் துய்ப்பதற்கு நாமெல்லாம் பக்குவமடைய வேண்டும் எனவும் கூறுகிறார் பண்டிதமணி அவர்கள். இதோ அவர் கூற்று:-

**தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான்... (திருவருட்பயன்)**

தரும் சக்தி - உபகரிக்கும் சக்தி - உயிர்களுக்கு உபகரியாமல் இருக்க மாட்டாமை பராசக்தியாகிய தேவியின் இயற்கை. தேவி கேவலாவஸ்தையில் தர்மிணியாயிருந்தும், சகலாவஸ்தையில் இமாசலத் தவக்குமரியாய் இருந்தும் உயிர்களுக்கு உய்தி அருளுகின்றாள்.

சுத்தாவஸ்தையில் தோடுடைய செவி பிரகாசிக்க இறைவனோ எழுந்தருளி பரிபக்குவம் எய்திய ஆன்மாவைத் தமது மடிமீதிருத்தி பரிசுத்த சிவஞானமாகிய திருமுலைப்பாலைச் சுரந்தருளுவாள். கேவலம் முதலிய மூன்று அவஸ்தைகளிலும் தேவியின் மூவகை அனுக்கிரகமும் ஒரே சமயத்தில் நடந்து கொண்டிருக்கும் என்பது சிந்தனைக்குரியது.

தேவியின் மூர்த்தி பேதங்கள் அநந்தம். தேவாரம் பெற்ற மகிமை வாய்ந்த திருத்தலமாகிய திருகோணமலையில் பத்திரகாளியாய் அருள்மழை பொழிந்தருளுகின்றாள்.

நாமெல்லாம் தேவியின் அருள் மழையில் முழுகுவதற்குப் பாத்திரமாகும் பொருட்டுத் தவம் செய்வோமாக! பத்திரகாளி அம்மையின் பாத கமலங்களுக்கு வணக்கம்.'

(தொடரும் ....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம் எண்ணெய் இறக்குமதி இனி அரசியல் மயப்படுத்தப்பட்ட செயல்

அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் பாம் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுமாயின் அது முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்ட செயற்பாடாகவே அமையும்.

இந்த நடைமுறை அமுல்படுத்தப்பட்டால் அரசாங்கத்துக்கு மிக நெருக்கமான எண்ணெய் இறக்குமதி நிறுவனங்களுக்கு மாத்திரமே அனுமதி கிடைக்கப்பெறும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் பாம் எண்ணெயை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றுஅமைச்சர்பந்துலகுணவர்தனதெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது பாம் எண்ணெயை இறக்குமதி அரசாங்கத்துக்கு நெருங்கிய நிறுவனங்களுக்கு மாத்திரமே அனுமதி கிடைக்கப்பெறும்.

ஆனால் வடை உள்ளிட்ட சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் ஆயிரக்கணக்கான வியாபாரிகள் நாட்டில் உள்ளனர். இவர்கள் சில்லறை விற்பனையாளர்களிடமிருந்தே எண்ணெய்யைப் பெற்றுக் கொள்வர். எனவே இவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் தீர்வு யாது ?

அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் எண்ணெய் இறக்குமதிக்கு அனுமதியளிக்கும் நடைமுறை அமுல்படுத்தப்படுமாயின், அது முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்ட செயற்பாடாகவே அமையும்.

இதன் மூலம் சகலருக்கும் தீர்வு கிடைக்கப்பெறாது. அத்தோடு கடந்த 2014 ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பாம் எண்ணெய் உற்பத்தியை ஊக்குவித்தார்.



ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

எனவே இவ்வாறு மக்களுக்கு நெருக்கடி ஏற்படும் வகையில் செயற்படாமல், நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். - என்றார்.

## கிளிநொச்சியில் கோர விபத்து!



கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக ஏ9 வீதியில் பயணித்த கார் மற்றும் டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகின.

கடந்த புதன்கிழமை பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கி ஒரே திசையில் பயணித்த இரு வாகனங்களே விபத்துக்குள்ளாகியுள்ளன.

வீதியில் பயணித்த கார் வீதியை குறுக்கிட்டு கடக்க முற்பட்டுள்ளது. காரின் பின்னால் பயணித்த மற்றுமொரு டிப்பர் வாகனத்தை முந்தி சென்ற டிப்பர் வாகனம் கார் வீதியை கடக்க முற்படுவதை அவதானிக்காமல் முந்தி செல்ல முற்றப்பட்டபோது காருடன் மோதியுள்ளது.

இதன்போது கார் பாரிய அளவில் சேதமடைந்து விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான கார் வீதி ஓரத்தில் இருந்த வாகன ரயருடன் மோதி நின்றுள்ளது. குறித்த ரயர் இல்லாத சந்தர்ப்பத்தில் மரத்துடன் மோதி பாரிய விபத்தில் சிக்கியிருக்கக்கூடும் என சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் இந்த விபத்தில் வாகனங்கள் பாரிய சேதமடைந்துள்ளமையுடன், எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் தெய்வாதீனமாக ஏற்பட்டிருக்கவில்லை. விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## திருட்டுகளுடன் சம்பந்தப்பட்ட மூவர் வவுனியாவில் கைது

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியாவில் கடந்த சில தினங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. அந்தவகையில் கடந்த 30 ஆம் திகதி வவுனியா, இலங்கை வங்கி விடுதியில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த தொலைகாட்சி பெட்டி மற்றும் சைக்கிள் என்பவற்றைத் திருடிச் சென்றிருந்தனர்.

அத்துடன், கடந்த முதலாம் திகதி தேக்கவத்தையில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த தொலைக்காட்சி பெட்டியையும், 8 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றிருந்தனர்.

மேலும், 6 ஆம் திகதி வவுனியா, குட்செட் வீதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த டிவிடி பிளேயர் மற்றும் 3/4 பவுண் தோடு என்பவற்றைத் திருடிச் சென்றிருந்தனர்.

குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் மதவுவைத்தகுளம், கற்குழி, தேக்கவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 39, 28, 24 வயதுடைய மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் விசாரணைகளின் பின் மூவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மின்சார பாவனையாளர்களுக்கு புதிய திட்டம் அறிமுகப்படுத்தல்

மின்சார பாவனையாளர்களுக்கு பாதுகாப்புத் தொகைக்கான வட்டியை வழங்கும் புதிய திட்டமொன்று கடந்த புதன்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த சலுகை லெகோ நிறுவன மின்சார பாவனையாளர்களுக்கு மாத்திரமே கிடைக்கவுள்ளது. இலங்கை மின்சார சபையின் ஊடாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் மின்பாவனையாளர்கள் இதில் அடங்க மாட்டார்கள் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிக்கிறது.

இலங்கை மின்சார சபை மற்றும் லெகோ மின்சார விநியோக நிறுவனம் ஆகிய இரண்டுமே இலங்கையில் மின்சார பாவனையாளர்களுக்கான மின்சார விநியோகத்தை வழங்குகின்றன.

இலங்கைமின்சாரசட்டத்தின்கீழ்மின்சாரபாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு வட்டி செலுத்தும்விழாகடந்தபுதன்கிழமைபண்டாரநாயக்க ஞாபக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது கருத்துத் தெரிவித்த ஆணைக்குழு தலைவர் ஜானக்க ரட்ணாயக்க -

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குள்ள அதிகாரத்தின் மூலமாக லெகோ நிறுவனத்துடன் இணைந்து பாதுகாப்பு இந்த புதிய திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில், லொகோ நிறுவனத்தின் ஊடாக மின்கட்டண இணைப்பின்போது செலுத்தப்பட்ட பாதுகாப்பு வைப்புத் தொகையின் அடிப்படையில் 8.68 என்ற வட்டி வீதத்தை மின்சார பாவனையாளர்களின் மின்சார பாவனைக்கான பட்டியல் கணக்கில் குறித்த வட்டி வீதம் வரவில் இடப்படும்.

மின்சார பாவனையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய பிரகடனம் இயற்றப்பட்டு, அதில் உள்ள உரிமைகளைப் பாதுகாக்க தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டன.

மின்சார பாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு வட்டி செலுத்துவது மின்பாவனையாளர்களுக்கு சிறந்த அனுகூலமாகும். கடந்த காலங்களில் இந்த வட்டி செலுத்தும் திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மின்சார பாவனையாளர்களால் சேவை வழங்கும் நிறுவனத்துக்கு அல்லது உரிமைதாரருக்குச் செலுத்திய பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு வட்டி செலுத்தப்பட வேண்டும் என இலங்கை மின்சார சட்டத்தின் பிரிவு 28 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் வெளிப்படையான முறையில் வட்டி விகிதங்களை நிர்ணயிப்பதற்கான ஒரு வழிமுறையை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உருவாக்கியுள்ளது.

இந்த ஆண்டுக்கான வட்டி 8.68 சதவீதமாகும் என அண்மையில் தீர்மானிக்கப்பட்டது. அந்த வட்டி விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு மின்சார சேவைகளைவழங்கும்உரிமம்பெற்றநிறுவனங்கள் வட்டியை கணக்கிட்டு தங்கள் வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டும்.

மின்விநியோக உரிமைதாரரான இலங்கை மின்சார தனியார் நிறுவனம் (லெகோ) தனது வாடிக்கையாளர்களுக்கு கடந்த புதன்கிழமை முதல் வட்டி செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

மின்பாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்பு தொகைக்கு வட்டி செலுத்தும் நடவடிக்கையின் மூலம் லெகோ நிறுவனத்தால் மாத்திரம் வருடாந்தம் 4 கோடியே 20 லட்சம் ரூபா தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் இலங்கை மின்சார சபையும் இந்த வட்டித் தொகையை செலுத்தும் திட்டத்தை செயல்படுத் துவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இந்தத் திட்டத்தை இலங்கை மின்சார சபை செயற்படுத்தும் பட்சத்தில், வருடாந்தம் சுமார் 120 கோடி ரூபா இலங்கை மின்சார பாவனையாளர்களின் மின் பட்டியல் கணக்கில் வைப்பில் இடப்படும். இது மின்சார தொழிற்துறையின் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு கிடைக்கும் ஒரு பாரிய நிவாரணமாக அமையும். - என்றார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### உயிரியற் பீடைநாசினிகளையும் பதிவு செய்ய வேண்டும்

நச்சு அல்லாத உணவுகளை நுகர்வதில் மக்கள் மிகுந்த கவனம் செலுத்துவதால், செயற்கை பீடைநாசினிகளைப் பயன்படுத்தாத பயிர்ச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே இவ்வாறான பயிர்ச்செய்கையைப் பாதிக்கும் பீடைகளின் தாக்கங்களைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட உயிரியல் பீடைநாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு சேதன விவசாயத்தின் கீழ் பயிரிடப்படும் பயிர்களுக்கு அதிக கேள்வியும் காணப்படுகின்றது.

பாரம்பரிய அறிவுடனும், முன் அனுபவத்தின் மூலமும் தயாரிக்கப்படும் மூலிகைகளினால் தயாரிக்கப்பட்ட பீடைநாசினிகள் உலகம் பூராகவும் பயன்படுத்தப்படுவதோடு, இலங்கையின் விவசாயத்திலும் இவை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும் வர்த்தக மட்டத்தில் உயிரியல் பீடை நாசினிகளை உற்பத்தி செய்து, விற்பனை செய்ய வேண்டுமெனில், பீடைநாசினிகள் பதிவாளர் அலுவலகத்தில் இவற்றை பதிவு செய்ய வேண்டுமென பீடைநாசினிகள் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# 'யாழ்ப்பாண மாநகர காவல்படை' விவகாரம் பாதுகாப்பு அமைச்சுக் கூட்டத்தில் ஆராய்வு

**கொழும்பு, ஏப்ரல் 08**

**பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத்தின் குழு அறை 1 இல் இன்று (வியாழக்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.**

**இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாநகரைத் தூய்மைப்படுத்தல் என்ற நோக்கில் மாநகர சபையால் நியமிக்கப்பட்டுள்ள காவல் படை தொடர்பிலும், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சீருடை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்தும் விசேடமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.**

இக்கூட்டத்தின் பின்னர் தேசியப் பாதுகாப்புக் கருதி சில முடிவுகள் எடுக்கப்பட்டன எனவும், அவை விரைவில் வெளியாகும் எனவும் கூட்டத்தில் கலந்து கொண்ட முக்கிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையால் மாநகரின் சுகாதார நடைமுறைகளைக் கண்காணித்தல், கழிவகற்றல் பொறிமுறையைக் கண்காணித்தல் மற்றும் மாநகரின் ஒழுங்கு உள்ளீட்டவற்றை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட காவல் படையின் சீரூடை விவகாரம் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைப் பகுதிகளுக்குள் காவல்துறையினர் பயன்படுத்திய சீருடையைப் போன்ற வர்ணத்தால் வடிவமைக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி சீருடைகள் தொடர்பில் யாழ்.மாநகர சபை ஆணையாளர், பிரதம வருமான வரிப் பரிசோதகர் மற்றும் குறித்த காவல் படையில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த மாநகர சபை ஊழியர்கள் ஐவர் உட்பட்ட 7 பேரிடம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் புதனிரவு மூன்று மணி நேரத்துக்கும் மேலாக தொடர் விசாரணை நடைபெற்றது.

கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற பணிப்புக்கு அமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கபட்டது எனச் சொல்லப் பட்டது. இந்நிலையிலேயே இன்று பிற் பகல் அவசரமாகக் கூடிய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் யாழ். மாநகர சபை விவகாரம் தொடர்பில் விசேடமாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளும், உயர் பாதுகாப்பு அதிகார்களும், பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.


## இந்துக் கற்கைகள் பீடம்

**இந்துக்கற்கைகள் பீடத்தின் முன்மொழியப்பட்ட கட்டடத்திற்கான முகப்பு வடிவமைப்பின் வரைவு தொடர்பான மாதிரி உருவுக்கான விண்ணப்பம்**

இலங்கைவாழ் இந்து சமூகத்தின் பண்பாட்டு நிலைக்களனாகவும் புலமைத்துவ மையமாகவும் தகவமைந்து மிளிரும் பொருட்டாய் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக்கற்கைகள் பீடம் நிறுவப்பட்டது. சேர்.பொன்.இராமநாத னின் அபிலாசைகளைக் கருத்தில் நிறைத்துக் காலந்தோறும் வழிகாட்டிய ஆன்றவிந்த கொள்கைச்சான்றோர்களின் ஆலோசனைகளால் ஆற்றுப்படுத்தப்பட்டு செழுங்கலை நியமமாகும் முனைப்போடு எமது பீடம் இன்று எழுந்து நிற்கின்றது.

இருப்பு என்பது வெறுமனே கருத்தியற்றளத்தில் மட்டும் அமையும் ஆயின் அது கனவாகவே கருதப்படும். செயல் முனைப்பும் நிறுவனமயமாக்கலும் திட்ட மிடுதலும் பொருள்சார் பரிமாணங்களுடன் இயைபுற்றவை. அந்தவகையில் எமது பீடத்தின் இருப்புக்கான கட்டுமானத் தொகுதிகளை உருவாக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக அமையவிருக்கும் இந்துக்கற்கைகள் பீட 'கட்டடத்திற்கான முகப்பு மாதிரித் தோற்றம்' குறித்த வரைவு சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. கீழே 'தொடர்பான விடயங்கள்' என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைக் கருத்திற் கொண்டு முகப்புத் தோற்றத்தினை வரைந்து பீடாதிபதி, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (021 221 2396) எனும் முகவரிக்கு 05.05.2021 இற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

தெரிவுசெய்யப்படும் முகப்பு மாதிரித் தோற்றத்தினை சமர்ப்பித்தவருக்கு பல்கலைக்கழக கௌரவிப்பும் பணப்பரிசிலும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு www.jfn.ac.lk

### தொடர்பான விடயங்கள்

1. முகப்புத் தோற்றம் அமையவுள்ள இடத்தின் பரப்பளவு
   நீளம்: 50 அடி அகலம்: 30அடி
2. நீளப்பகுதி முன் பகுதியாகக் கருதப்படும்.
3. மொத்தமாக நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடத்திற்கான முகப்புத் தோற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.
4. யாழ்ப்பாணத் தமிழ்க் கலாசாரத்தினையும் இந்துக்களின் கட்டடக் கலை மரபுகளையும் முன்னிலைப்படுத்தி முகப்பு அமைக்கப்பட வேண்டும்
5. தங்களினால் சமர்ப்பிக்கப்படும் முகப்புத் தோற்றத்தின் வடிவமைப்புக்களின் மாதிரிகளுக்கான விளக்கங்களும் தெளிவான முறையில் வழங்கப்பட வேண்டும்.
6. ஒருவர் எத்தனை முகப்பு மாதிரிகளையும் அனுப்பி வைக்க முடியும்.
7. அனைத்து மாதிரிகளும் A3 (29.7cm x 42cm) அளவு தாளில் வரையப்பட்டிருத்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


# மாநகர சபை அமர்வை புறக்கணித்த ஈ.பி.டி.பி.



யாழ். மாநகர சபையின் இன்றைய அமர்வுகளை ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி புறக்கணித்துள்ளது என்று மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் முதல்வருமான திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை முதல்வரினால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'மாநகர காவல் படை' தொடர்பில் தம்முடன் கலந்துரையாடப்படாமையே இன்றைய புறக்கணிப்பிற்கு காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியலில் ஆர்வம் செலுத்துகின்ற இளைய தலைமுறையினருக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பதற்காக சட்டத்தரணி மணிவண்ணனுக்கு ஆதரவு வழங்குவதற்கு எமது கட்சியின் தலைமை தீர்மானித்திருந்தது.

எவ்வாறெனினும், எமது கட்சியின் ஆதரவுடன் ஆதிகாரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அவை தொடர்பாக எம்முடனும் கலந்துரையாட வேண்டியது தார்மீகக் கடமையாகும்.

ஆனால் காவல்படை உருவாக்கம் தொடர்பாக எம்மோடு கலந்துரையாடப்படவில்லை. இதுதொடர்பில் எமது கரிசனையை வெளிப்படுத்தும் வகையிலேயே இன்றைய அமர்வுகளை புறக்கணித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# கண்காணிப்புக் காவலர்களுக்கு புலிகளின் பொலிஸ் சீருடையா?

## யாழ். மேயர் மணி விளக்கம்



**(எஸ்.நிதர்ஷன்)**

கொழும்பு மாநகர சபையைப் பின் பற்றியே, யாழ்ப்பாணம் மாநகர கண் காணிப்புக் காவலர்களுக்கும் சீருடை வழங்கப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

சீருடை வழங்கிய விடயத்தில் வேறு எந்த உள்நோக்கமோ, திட்டமோ தங்களுக்கு இருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர ஆணையாளர் மற்றும், கண்காணிப்புக் காவலர்களிடம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பாக இன்று யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று நாங்கள் யாழ். மாநகரத்தைத் தூய்மையாகவும் அழகாகவும் பேணுவதற்காக எங்களுடைய மாநகர சபை ஊழியர்களை ஒரு பணிக்காக அமர்த்தியிருந்தோம்.

அது தொடர்பில் விளக்கமளிப்பதற்காக பத்திரிகையாளர் சந்திப்பின் ஊடாக அதனை மக்களுக்குக் கூறியிருந்தோம்.

உண்மையிலே யாழ். மாநகரத்தை அசிங்கப்படுத்துகின்ற, குப்பைகளை வீசியெறிகின்ற, பொது இடங்களில் வெற்றிலை துப்புகின்றவர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக யாழ்.மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றி அந்தத் தீர்மானத்தின் ஊடாக எவ்வளவு ரூபா தண்டப்பணமாக அற விடுவது என்பதை வர்த்தமானியில் அறிவித்து அந்த வர்த்தமானி பிரசுரம் வெளியாகிய பின்னர் நாங்கள் எங்களுடைய வழமையான செயற்பாட்டில் ஒன்றாக விசேடமாக சிலரைப் பணிக்கு அமர்த்தியிருந்தோம்.

அதிலும் குறிப்பாக கண்காணிப்புக் காவலர்களாக நியமிக்கப்பட்ட இந்த ஐந்து ஊழியர்களும் சபையில் ஊழியர்களாகச் செயற்பட்டவர்களே. அவர்களையே இந்த விசேட பணிக்கு நாங்கள் நியமித்திருந்தோம்.

அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும்போது மக்கள் அவர்களை இலகுவாக அடையாளம் காணவேண்டிய தேவை இருந்தாலும், அவர்களுக்கு வேண்டத்தகாத பிரச்சினைகள் ஏற்படக் கூடாது என்பதற்காக சீருடை ஒன்றையும் அறிமுகப்படுத்தி வழங்கியிருந்தோம்.

இந்தச் சீருடை எதைப் பார்த்து நாங்கள் செய்தோம் என்றால் கொழும்பு மாநகர சபையில் இருக்கும் நடைமுறைகளைப் பின்பற்றித்தான். கொழும்பு மாநகர சபை பின்பற்றுகின்ற, பாவிக்கின்ற சீருடையையே நாங்களும் இந்த ஊழியர்களுக்கு வழங்குவது என யோசித்து அதே மாதிரியான சீருடையை வழங்கியிருந்தோம். இதில் வேறு எந்த உள்நோக்கமோ, திட்டமோ எங்களுக்கு இருக்கவில்லை.

இந்தச் சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையின் சீருடை போன்று இருக்கின்றது எனச் சிலர் சொல் கின்றார்கள். என்னைப் பொறுத்தவரை சில இடங்களில் அது பொருந்தியிருக்கலாம். ஆனால், நாங்கள் கொழும்பு மாநகர சபையை முன்மாதிரியாகக் கொண்டே இதனைச் செய்திருந்தோம். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவனெல்ல சம்பவத்தை விசாரணை செய்திருந்தால் ஏப்ரல் தாக்குதல் இடம்பெற்றிருக்காது - ஜீ.எல். பீரிஸ்



மாவனெல்ல புத்தர் சிலை சேதப்படுத்திய சம்பவத்தை முறையாக விசாரணை மேற்கொண்டு சந்தேக நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்திருந்தால், ஏப்ரல் தாக்குதல் பேரழிவு ஏற்பட்டிருக்காது.

அதனால் இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய அரசியல் தலையீடுகள் இடம்பெற்றிருக்கின்றனவா என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான நான்காவது நாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி ஆணைக்குழு, தனக்குரிய சட்ட வரையறைக்குள் விசாரணையை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றது.

ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆணைக்குழு என்பது நீதிமன்றம் அல்ல. அதற்கு வழக்கு தொடுக்கும் அதிகாரம் இல்லை. என்றாலும் தாக்குதல் சம்பவம் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய பல்வேறு பரிந்துரைகளை ஆணைக்குழு செய்திருக்கின்றது.

அத்துடன் ஏப்ரல் தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் மாவனெல்லயில் புத்தர் சிலை சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொண்டு சந்தேக நபர்களைக் கைதுசெய்திருந்தால் ஏப்ரல் தாக்குதல் பேரழிவு இடம்பெற்றிருக்காது.

மாவனெல்ல சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களை விடுவிக்க அரசியல்வாதிகளின் பணிப்புரைகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பது தொடர்பாக விசாரணை செய்யப்படவேண்டும்.

மேலும் ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு பல பரிந்துரைகளைச் செய்திருக்கின்றது. அந்த பரிந்துரைகளை செயற்படுத்த அரசாங்கம் கடமைப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்ற தீர்மானத்தை மேற்கொண்டு, அதனை அரசாங்கத்துக்கு அறிவிக்கவே அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. தற்போது அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. என்றாலும் இந்த அமைச்சரவை உபகுழு தொடர்பாகவும் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

அத்துடன் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரை 99 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

36 விசாரணைகள் பூரணமாக நிறைவடைந்திருக்கின்றன. தற்போது சந்தேக நபர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களுக்கமைய அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் அதிகாரம் சட்டமா அதிபருக்கே இருக்கின்றது. அதுசம்பந்தமான 36 அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. சட்டமா அதிபரின் கடமையில் அரசாங்கம் தலையிட முடியாது. அவ்வாறு தலையிடப் போவதும் இல்லை.

என்றாலும் பலதரப்பினரதும் கோரிக்கைக்கமைய பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியுமான விடயங்களை விரைவுபடுத்துமாறு சட்டமா அதிபருக்கு தெரிவிக்க முடியும். - என்றார்.

# கத்தோலிக்க மக்களை திசைதிருப்ப முயற்சி!

## அரசு மேற்கொள்கிறது என்கிறார் முஜிபுர்



கத்தோலிக்க மக்கள் உள்ளிட்ட பல தரப்பினராலும் அரசாங்கத்துக்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்காகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே அரசாங்கம் முயற்சிக்கிறது. எனினும் நாம் இதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலை 2019 ஜனாதிபதித் தேர்தலின் போது பிரதான பிரசாரமாக இந்த அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது. எனினும் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் எந்தவொரு நபரும் கைது செய்யப்படவில்லை.

மாறாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை முழுமையானதாகக் காணப்படவில்லை. எனினும் அதில் கூறப்பட்டிருந்த சில முக்கிய காரணிகளின் அடிப்படையில் அவதானிக்கும் போது சஹ்ரானுக்கு அப்பால் பிரிதொரு சக்தி இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ளது என்ற சந்தேகம் எழுகிறது.

2019 நல்லாட்சி அரசாங்கத்தில் கைது செய்யப்பட்ட நௌபர் மௌலவியே இதன் பிரதான சூத்திரதாரி என்று கூறுகின்றனர். ஆனால் தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியாக இருக்கும் போது பிரதான சூத்திரதாரி தொடர்பில் பல பிரசாரங்களை முன்னெடுத்தது. அவ்வாறெனில் தற்போதைய அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட பிரதான சூத்திரதாரி யார்? இதனை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

கத்தோலிக்க மக்கள் உள்ளிட்ட பல தரப்பினராலும் அரசாங்கத்துக்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்காகவே இந்த அறிவித்தல் விடப்பட்டிருக்கிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தகவல்களை அறிந்து வைத்திருந்த சாரா என்பவர் உயிருடனிருப்பதாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் ஏன் அது தொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமலுள்ளது? இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மக்களின் கவனத்தை வேறு திசைக்கு மாற்றவே அரசாங்கம் முயற்சிக்கிறது. எனினும் நாம் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. - என்றார்.

# வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் வவுனியாவில் இருவர் கைதாகினர்



வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் இருவர் நேற்று (வியாழக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாள்வெட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றிருந்தது. மக்கள் பலர் பார்த்துக் கொண்டிருந்த நிலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன், பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் சென்று விசாரணைகளை முன்னெடுத்த போதும் கடந்த புதன் வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் புதன் இரவு இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவியதையடுத்து வவுனியா பொலிஸாரால் குறித்த சம்பவம் தொடர்பில் இருவர் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்யுமாறு நான் பிரதி பொலிஸ்மா அதிபர் ஊடாக பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கிய போதும் தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் எவரும் விவரம் தெரிவிக்காமையால் சம்பவம் தொடர்பில் எவரும் உடனடியாகக் கைது செய்யப்படவில்லை.

புதன் இரவு தாக்குதல் தொடர்பில் எனக்கு ஒருவர் காணொலி ஒன்றை அனுப்பியிருந்தார். அதனை உடனடியாகவே பிரதி பொலிஸ்மா அதிபருக்கு நான் வழங்கியிருந்தேன். இதன் அடிப்படையிலேயே இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

## ஜம்புரேவெல சந்திரரத்ன தேரர் கைது



*கொழும்பு, ஏப்.09*

*வண. ஜம்புரேவெல சந்திரரத்ன தேரர் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் வாகனமொன்றை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.*

# தாய், தந்தை கண்முன்னே 3 வயது ஆண் குழந்தை பலி

## கெக்கிராவையில் சோகம்

கொழும்பு, ஏப்.09

கெக்கிராவை, 79 ஆவது கிலோ மீற்றர் தூண் அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் வீதியின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனமொன்று மீண்டும் வீதியை நோக்கி திருப்ப முற்பட்ட போது கெக்கிராவை நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்று மோட்டார் வாகனம் மீது மோதியுள்ளது.

பின்னர் வீதியின் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியினர் மற்றும் அவர்களது 3 வயது ஆண் குழந்தை படுகாயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் குழந்தை உயிரிழந்துள்ளது.

இதேவேளை, கலேவெல, அம்பேபுஸ்ஸ - திருகோணமலை வீதியின் பெலிகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

கலேவெல பகுதியில் இருந்து குருணாகலை நோக்கி பயணித்த டிப்பர் வாகனமொன்று எதிர்த்திசையில் வந்த ஓட்டோ ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி கலேவெல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

46 வயதுடைய பொதுஹெர பிரதேசத்தைச் சேர்ந்தவரே விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்புக் கூறவேண்டும்

## ருவான் விஜேவர்தன சாடல்



உயிர்த்த ஞாயிறுதின தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக் கூறவேண்டியவர். இந்தத் தாக்குதல் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றிருந்தால் அதனை நாட்டின் தலைவர் அறியாதிருப்பதற்கான வாய்ப்பில்லை. எனவே அவரே பொறுப்புக் கூற வேண்டியவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் அடிப்படைவாத கருத்துகளைப் பரப்பி வரும் அமைப்புகளை தடை செய்ய வேண்டும் என்ற கருத்தைத் தாம் வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன, மேலும் கூறியவை வருமாறு -

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகளாக நௌபர் மௌலவி மற்றும் ஹஜ்ஜுல் அக்பர் ஆகியோரின் பெயர் வெளியிடப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இது தொடர்பில் மேலும் ஆராய்ந்துபார்க்க வேண்டும். பயங்கரவாதி சஹ்ரான் மற்றும் நௌபர் மௌலவி ஆகிய இருவருக்கும் இடையில் தலைமைத்துவம் தொடர்பில் குழப்பநிலைமை ஏற்பட்டிருந்தது. அதனால் அதிலொரு சிக்கல்தன்மை உள்ளது. இந்நிலையில் மௌலவி பிரதான சூத்திரதாரி என்றால் அதற்கான ஆதாரங்களும் வெளியிடப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக இல்லாவிட்டாலும் அவரே பொறுப்புக் கூறவேண்டியவர். நாட்டில் தாக்குதல் ஒன்று இடம்பெற வாய்ப்புள்ளதாக அரச புலனாய்வு துறையினர் அறிந்துக் கொண்டிருந்தால், அதனை நாட்டின் தலைவருக்குத் தெரியப்படுத்தாமல் இருப்பதற்கான வாய்ப்பில்லை. இதேவேளை, நாட்டின் ஜனாதிபதி இன்னுமொரு நாட்டுக்குச் செல்வதாகத் தீர்மானித்தால் நாட்டை வழிநடத்தும் பொறுப்பை இன்னுமொருவருக்கு ஒப்படைத்துச் செல்ல வேண்டும்.

அப்போதைய பாதுகாப்பு அமைச்சராகவும் முன்னாள் ஜனாதிபதியே செயற்பட்டிருந்தார். இந்நிலையில் அவர் நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டாவது இது தொடர்பில் தீர்மானம் எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு எதனையும் செய்யவில்லை. அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்தப் பொறுப்புக்களைக் கையளிப்பதில் அவருக்கும் திருப்தி இல்லை என்றால், இந்தப் பொறுப்புகளைத் தனக்கு நம்பிக்கையான ஒருவருக்கு ஒப்படைத்திருக்க முடியும். ஆனால் இது எதனையும் முன்னாள் ஜனாதிபதி செய்யவில்லை.

இதேவேளை, அடிப்படைவாதக் கருத்துகளை பரப்பி வரும் அமைப்புகளைத் தடைசெய்வது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நாம் வரவேற்கின்றோம். அடிப்படைவாதக் கருத்துகள் காரணமாக நாட்டில் குழப்ப நிலைமை ஏற்படுகின்றது என்றால் அவற்றை தடை செய்வதே சிறந்தது. பொதுபலசேனா அமைப்பின் சில கருத்துக்கள் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் பொதுபலசேனா முற்று முழுதான அடிப்படைவாத அமைப்பெனக் கூற இயலாது எனவும் குறிப்பிட்டார்.

# உணவுப் பொருள்கள், மக்களின் நிலை தொடர்பில் ஆராயும் நிலை ஏற்பட்டுள்ளது

## ருவான் விஜேவர்தன கூறுகின்றார்

சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காணுவதைப் போன்று உணவுப் பொருளகள் மற்றும் மக்களின் ஆரோக்கியம் தெராடர்பிலும் ஆராய்ந்து, அதற்கான தீர்வை காண வேண்டிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்து வருவதுடன் , இதனூடாக நாட்டு மக்களுக்குச் சிறப்புமிக்க எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதே எமது நோக்கமாகும்.

அரசாங்கத்தின் தலையீட்டின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிங்கராஜ வனத்தைப் பாதுகாப்பதே எமது பிரதான நோக்கமாகும். இந்நிலையில் வனவளப் பாதுகாப்பு தொடர்பான சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவதுடன், அதனூடாக வன அழிப்புகள் மற்றும் சுற்றாடல் பாதிப்புகளைத் தடுத்து நிறுத்த முடியும்.

சுற்றாடல்பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து நாம் கொள்கைத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளோம். அதற்கமைய வனபாதுகாப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்தை மேலும் வலுப்படுத்துவதுடன், 1988 ஆம் ஆண்டின் தேசிய வன உரிமை தொடர்பான சட்டத்தைத் திருத்தம் செய்வதன் ஊடாகக் கட்டளைச் சட்டக்கோவையின் சட்ட விதிகள் புறக்கணிக்கப்பட்டால் அவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க முடியும். நக்கிள்ஸ் மற்றும் சிவனொளிபாதமலை வனப்பகுதி பாதுகாப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்நிலையில் நாட்டிலுள்ள வனாந்தரங்கள் மற்றும் சிறியளவிலான காடுகள் என்பவற்றினதும், ஆறுகள், நீர் என்பவற்றின் பாதுகாப்பு தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து நாம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சுற்றாடல் துறைச்சார்ந்தவர்கள் மற்றும் இது தொடர்பில் அக்கறை கொண்ட அனைவரும் எம்முடன் கலந்துரையாட முடியும்.

தற்போதைய அரசாங்கத்தில் சூழல் தொடர்பில் மட்டுமல்ல உணவுப் பொருள்கள் தொடர்பிலும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் உணவுப் பொருள்கள் மற்றும் மக்களின் ஆரோக்கியம் தொடர்பிலும் ஆராய்ந்து பார்த்து அது தொடர்பான எமது திட்டங்களைத் தெரிவிக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

25 வருட காலக் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரி யரால் தரம் 06 முதல் 11 வரையான மாணவர்களுக் குத் தமிழ் வகுப்புகள் ZOOM செயலி ஊடாக … இணைந்து கொள்ள,
**(076) 454 5709 ஐ அழையுங்கள்!**
**மாதாந்தக்கட்டணம் 400/= மட்டுமே!**

## ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று வீதத்திற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 203.5 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 199.21 ரூபாவாகப் பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

## 13 கோடியே 60 லட்சம் ரூபா வைப்பிலிட்ட இளைஞன் கைது

கொழும்பு, ஏப். 09

மொறட்டுவ - இரத்மலானை பகுதியில் 13 கோடியே 60 லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணத்தை வைப்பிலிட்டிருந்த வங்கிக் கணக்கின் உரிமையாளர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ள சந்தேக நபரான தர்மசிறி பெரேராவுக்கு சொந்தமான பணமே இளைஞரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் பல்வேறு குற்றச் செயற்பாடுகளைச் செய்துவிட்டு, தற்போது வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ள தர்மசிறி பெரேரா என்ற சந்தேக நபருக்கு சொந்தமான பணமே இவ்வாறு வைப்பிலிடப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org